www.padippakam.com

ஆகஸ்டு 2003 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## மின்சாரக் கொள்ளை

தில்லியில் மின்சாரம் விநியோகிப்பது தனியார்மயமாக்கப்பட்ட பின் அந்தச் 'சேவையில்' டாடாவும், ரிலையன்சும் குதித்தன. இந்த இரு நிறுவனங்களும் ''ட்ரான்ஸ்கோ'' என்ற அரசு நிறுவனத்திடமிருந்து, ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ. 1.32-க்கு வாங்கி, வீடுகளுக்கு ரூ. 4.16-க்கு விற்கின்றன; தில்லி அரசின் குடிநீர் வாரியத்திற்கு ரூ. 6.52-க்கும், நகராட்சிகளுக்கு ரூ. 6.92-க்கும் ஒரு யூனிட் மின்சாரம் விற்கப்படுகிறது. உமி கொண்டு வந்தவன் அவல் தின்னும் இந்தக் கதையில், டாடாவும், ரிலையன்சும் 2,000 கோடி ரூபாய் அளவிற்கு இலாபம் ஈட்டியுள்ளன. ஒரிசாவிலோ, மின் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்கள், அரசுக்குச் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தைச் செலுத்தாமல், ''டிமிக்கி'' கொடுத்து வருவதால், அம்மாநில அரசு அடைந்துள்ள நட்டம் 3,240 கோடி ரூபாய்!

## கல்வி வள்ளல்களின் பித்தலாட்டம்

தனியார் பொறியியல் கல்லூரிகள், தங்களின் வருமானத்தில் 80 சதவீதத்தை, ஆசிரியர்களின் சம்பளமாகத் தர வேண்டும் என்பது அனைத்திந்திய தொழில்நுட்பக் கழகத்தின் விதி. தனியார் பொறியியல் கல்லூரிகள் இந்த விதியைக் காரணங்காட்டியே, கல்விக் கட்டணத்தை தாறுமாறாக உயர்த்திவிட்டன. ஆனால், மும்பய் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் நடத்திய ஆய்வில், ''மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள 131 தனியார் பொறியியல் கல்லூரிகளில், (இவற்றுள் 100 பொறியியல் கல்லூரிகள் அரசியல்வாதிகளுக்குச் சொந்தமானது) 14,000 ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டிய இடத்தில், 7,200 ஆசிரியர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர்; இவர்களுள் 3,000 ஆசிரியர்கள் தற்காலிகமானவர்கள். இதன்படி பார்த்தால், தனியார் பொறியியல் கல்லூரிகள் தங்களின் வருமானத்தில் 50 சதவீதத்துக்கும் குறைவாகவே ஆசிரியர்களின் சம்பளத்திற்குச் செலவழிக்கின்றன'' எனக் குறிப்பிட்டு இப்பித்தலாட்டத்தை அம்பலப்படுத்தியிருக்கிறது.

## காசுமீரில் மனநோயாளிகள் அதிகரிப்பு

காசுமீர் பள்ளத் தாக்கில் உள்ள பாரமுல்லா, தங்மார்க், பட்கான், ராஜ்பாக் பகுதிகளில் வாழும் பெரும்பாலான பள்ளி மாணவிகள் ஒருவிதமான மனநோய்க்கு ஆளாகியிருப்பதை மனநல மருத்துவர்கள் பரிசோதனைகள் செய்து கண்டுபிடித்துள்ளனர். குறிப்பாக, பாரமுல்லாவில் எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் முகாமிட்டிருந்த பள்ளியைச் சேர்ந்த மாணவிகளை மருத்துவர்கள் பரிசோதனை செய்ததில், பல மாணவிகள், செத்துப் போன எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்களின் ஆவிகள், தங்களின் பள்ளியைச் சுற்றி வருவதாகக் கூறியுள்ளனர். ''எந்நேரமும் இராணுவத்தினரின் கண்காணிப்பின் கீழ் வாழ்வது; தேடுதல் வேட்டையின்பொழுது, தங்களது உறவினர்களை இராணுவம் சித்திரவதை செய்வது; இராணுவத்தினர் பிடித்துப் போன உறவினர்கள் காணாமல் போவது; துப்பாக்கி வெடிச் சத்தத்தின் கீழ் பயந்து வாழ்வது'' - இவைதான் இப்பள்ளி மாணவிகளை மனநோயாளிகளாக மாற்றிவிட்டதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

## சலுகையா? மோசடியா?

விவசாயத்திற்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டியை 14 சதவீதத்தில் இருந்து 9 சதவீதமாகக் குறைத்ததையும்; உ.பி., உத்தராஞ்சல், அரியானா மாநிலங்களைச் சேர்ந்த கரும்பு விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் 600 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதையும் காட்டி, தன்னை விவசாயிகளின் நண்பனாகக் காட்டிக் கொள்கிறது, பா.ஜ.க. கூட்டணி ஆட்சி. ஆனால், இவை இரண்டும் சலுகைகள் அல்ல; மோசடிகள். ''ரூ. 50,000/- வரையில் வாங்கப்படும் விவசாயக் கடன்களுக்கு மட்டும்தான் வட்டிக் குறைக்கப்பட்டுள்ளது. ஒரு கிணறு தோண்டவே ஒரு இலட்ச ரூபாய் தேவைப்படும்பொழுது, இந்த வட்டிக் குறைப்பால் விவசாயிகளுக்கு எந்தப் பலனும் கிடையாது; கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அதிகமுள்ள தமிழ்நாடு, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களைப் புறக்கணித்துவிட்டு, உ.பி., உத்தராஞ்சல், அரியானா மாநிலங்களுக்கு மட்டும் 600 கோடி ஒதுக்கியிருப்பதற்குக் காரணமே, அம்மாநிலங்களில் தனியார் சர்க்கரை ஆலைகள் அதிகமாக இருப்பதுதான்'' என விவசாய அமைப்புகள் இச்சலுகைகளை அம்பலப்படுத்தியுள்ளன.

## கேழ்வரகில் நெய் வடிகிறதென்றால்....

விசுவ இந்து பரிசத், இந்து மதவெறி பிடித்த கொலைகாரக் கும்பல் என்பது உலகத்திற்கே தெரியும். ஆனால், வருமான வரித்துறை தீர்ப்பாணையமோ, விசுவ இந்து பரிசத்தை பொதுநலம் கொண்ட தர்ம ஸ்தாபனமாக அங்கீகரித்துள்ளது. இத்தீர்ப்பாணையம், தனது தீர்ப்பில், ''விசுவ இந்து பரிசத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்பதற்காக, இந்த அமைப் பைக் குற்றவாளியாக்க முடியாது. பாபர் மசூதியை இடித்த மொத்த குற்றச்சாட்டையும் விசுவ இந்து பரிசத் மீது சுமத்த முடியாது. ஏனென்றால், மசூதியை இடித்ததில் இவ்வமைப்பைச் சேராத இந்துக்களுக்கும் பங்குண்டு'' எனக் கூறி, வெளக்குமாறுக்கு பட்டுக் குஞ்சம் கட்டியிருக்கிறது. மேலும், விசுவ இந்து பரிசத் கட்ட வேண்டிய 55.37 இலட்ச ரூபாய் வரி பாக்கியையும் தள்ளுபடி செய்து விட்டது.

மும்பய் - தானே பகுதியில் நடந்த வி.இ.ப.வின் ''திரிசூலம் வழங்கும் விழா''. கொலைக் கருவியைக் கையிலே தூக்கிக் கொண்டு அலையும் வி.இ.ப. தர்ம ஸ்தாபனமா?




படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 18**

**இதழ் 10**

**ஆகஸ்டு 2003**

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**அட்டை ஓவியம்:**
**முகிலன்**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


# நிழல் மனிதர்களும் உளவுத் துறையும்

மதுரை அருகேயுள்ள கருப்பாயூரணி போலீசார், செரினா என்ற பெண்ணையும் அவரது தாயார் ரெஜினாவையும் கஞ்சா மற்றும் ஹெராயின் போதை மருந்து வழக்கில் கடந்த மாதம் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து முப்பது கிலோ போதைப் பொருட்களும், சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் ரொக்கமும் 20 சவரன் நகைகளும் கைப்பற்றியதாக போலீசார் கூறுகின்றனர். வழக்கமாக இப்படிப்பட்ட நடவடிக்கைகளின்போது கைப்பற்றப்பட்ட பொருட்களோடு குற்றவாளிகளை நிறுத்தி, இத்தகைய 'சாதனை' புரிந்த போலீசாரும் பத்திரிக்கையாளருக்கு முன் நின்று புகைப்படமெடுத்துக் கொண்டு அதைப் பிரசுரிக்கவும் செய்வார்கள். ஆனால், இந்த செரினா, ரெஜினா விவகாரத்தை முற்றிலும் மர்மமான, இரகசியமான முறையில் வைப்பதற்கு போலீசார் அதீத அக்கறை காட்டியுள்ளனர். அவர்களைக் காவல் நீட்டிப்புக்காக வழக்கு மன்றம் கொண்டு வந்த போது ஒரு ''வி.ஐ.பி''க்குரிய அளவு போலீசார் சூழ்ந்து கொண்டு புகைப்படமெடுப்பதையும், செய்திகள் சேகரிப்பதையும் தடுப்பதற்குக் கடும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனால் பத்தோடு பதினொன்றாவது கடத்தல் - கிரிமினல் வழக்கு என்று இதை ஒதுக்கி விடுவதற்கில்லை. மேலும், இந்த வழக்கு குறித்து கிசுகிசு பத்திரிக்கைகளில் வரும் செய்திகள் வெறும் வதந்திகள் என்று நம்பாமலிருக்கவும் முடியவில்லை.

''முதுகலை பட்டம் பெற்ற, ஆடம்பர மோகமும் பணத்தாசையும் கொண்ட செரினாவை சில மாதங்களுக்கு முன்பு தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரி சசிகலாவின் கணவர் நடராஜன் இரகசியத் திருமணம் செய்து கொண்டு, இரகசிய வாழ்க்கை நடத்தி வந்தார். பல கோடி ரூபாயும், ஆடம்பர கார், பங்களா நகைகளையும் செரினாவுக்கு நடராஜன் பரிசளித்துள்ளார். இதனால் ஆத்திரமுற்ற சசிகலா, முதல்வர் ஜெயலலிதாவின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, போலீசை ஏவி, கோடிக்கணக்கான ரொக்கத்தையும் நகைகளையும் மீட்டதோடு, செரினா - ரெஜினா மற்றும் அவர்களின் கார் ஓட்டுநரும், நடராஜனின் விசுவாசியுமான சதீசையும் கஞ்சா வழக்கில் கைது செய்து சித்திரவதை செய்கிறார்கள்.'' - 'நக்கீரன்' முதலிய சில ஏடுகள் இவ்வாறு செய்திகள் வெளியிட்டு வருகின்றன. ஆனால், ஜூனியர் விகடன், தினமலர் போன்ற ஆளுங்கட்சி ஆதரவுப் பத்திரிக்கைகள் செரினா ஒரு விபச்சாரி, அ.தி.மு.க.வின் பிரமுகர்கள் முதல் பல பணக்காரர்களுடனும் உறவு வைத்திருந்தார். அவரை வைத்து டெல்லியில் கூட பலரும் பல காரியங்களை சாதித்துக் கொண்டனர்; நடராஜன் செரினாவைத் தனது வளர்ப்பு மகளைப் போல கருதி உதவி செய்தார் என்று ஆரம்பத்தில் எழுதின. இப்போது அவையே கூட, அவர்களுக்கிடையில் இரகசிய உறவு இருந்ததாக எழுதுகின்றன. இரண்டுமே போலீசு உளவுத்துறைத் தகவல்கள் என்று கூறுகின்றன.

சசிகலா அவரது கணவர் நடராஜன் மற்றும் தினகரன், பாஸ்கரன், மகாதேவன், திவாகரன் உள்ளிட்ட அவர்களின் நெருங்கிய உறவினர்கள் அரசியல் சட்டத்துக்கு அப்பாற்பட்ட அதிகார மையங்களாகச் செயல்பட்டு வருகிறார்கள்; பினாமி சொத்துக்களை வாங்கிக் குவிக்கிறார்கள் என்பதும், ஜெயலலிதா ஆட்சியில் இதெல்லாம் ''சகஜம்'' என்பதும் ஊரறிந்த இரகசியம். நடராஜனோடு கட்சிக்காரர்களும் அதிகாரிகளும் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்று ஜெயலலிதாவே பலமுறை அறிக்கை வெளியிட்டுள்ளார் என்ற போதும் ஆளுங்கட்சிப் பிரமுகர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் நடராஜனின் தயவை நாடிப் போவதும், அவரது கட்டளைகளை ஏற்று நடப்பதும் தொடரத்தான் செய்கின்றன. நடராஜன் மர்மமான வாழ்க்கை நடத்துவதோடு, உ.பி., டெல்லி, அரியானா போன்ற இடங்களில் கல்லூரிகள் நடத்துவது முதல் பல தொழில்களில் முதலீடு செய்துள்ளார்; உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல நிழல் மனிதர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துத் தொழில் நடத்துகிறார். சாதாரண மக்கள் தொடர்பு அதிகாரியாக வாழ்க்கைத் தொடங்கிய சசிகலா - நடராஜன் தம்பதியினர் இன்று பல கோடி ரூபாய் சொத்துக்களுக்கு அதிபதிகள்.

போதைப் பொருள் வழக்குப் போட்டு வேண்டாதவர்களைப் பழிவாங்குவதும், உருட்டி மிரட்டிக் காரியத்தைச் சாதிப்பதும் இந்த ஆட்சியில் புதிதல்ல. இப்படிச் செய்வதையே தனது வாடிக்கையாகக் கொண்டிருந்த போலீசு அதிகாரி முத்துக் கருப்பனுக்கு பெரிய பதவி கொடுக்கப்பட்டு, பின்னர் குப்புறக் கவிழ்க்கப்பட்டார். ஜெயலலிதாவின் முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன் மற்றும் அவரது நெருங்கிய கூட்டாளிகள் மீது இதற்கு முன்பு போதைப் பொருள் வழக்குப் போட்டு கைது செய்தார்கள். ஜெயா-சசி கும்பல் பதுக்கி வைத்திருந்த பினாமிப் பணத்தை மீட்பதற்காகத்தான் இப்படிச் செய்தார்கள் என்று பத்திரிக்கைகள் எழுதின. அந்த வழக்குகள் என்ன ஆயின என்று தெரியவில்லை. இப்போது ''சக்களத்தி''ச் சண்டையில் பழிவாங்கவும் பினாமி சொத்தை மீட்கவும் மீண்டும் கஞ்சா வழக்கு போடப்படுகிறது என்று ஆளுங்கட்சி ஆதரவு ஏடுகளே எழுதுகின்றன. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, போலீசும் உளவுத்துறையும் அரசியல் எதிரிகளையும் மக்களையும் ஒடுக்குவதற்கு மட்டுமல்ல, இம்மாதிரியான காரியங்களுக்கும் எப்படிச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதும், அவர்கள் ஏன் இந்த ஆட்சியில் செல்லப் பிள்ளைகளாக உள்ளனர் என்பதும்தான். ●

படிப்பகம்

www.padippakam.com

**✱அரசு ஊழியர் - தொழிலாளர் உரிமைகளைப் பறிப்பது ✱போராட்டங்களைத் தடை செய்து ஒடுக்குவது ✱தொழிற்சங்கங்களை ஒழிப்பது ✱தொழிலாளரைக் கொத்தடிமையாக்குவது**

# உலகவங்கி உத்தரவில் அமலாகிறது புதிய தொழிலுறவுக் கொள்கை

இது ஒரு மரண அறிவிப்பு. தமிழ்நாடு மட்டுமல்ல, நாடு முழுவதும் போலி கம்யூனிஸ்டுகள், போலி ஜனநாயகவாதிகள், போலி முற்போக்குகளின் தலைமையிலான தொழிற்சங்க இயக்கம் மரணமடைந்து விட்டது. படுகாயங்களுக்குப் பலியாகி விட்டது. ஏற்கெனவே பலமுனைத் தாக்குதலால் படுகாயமுற்றிருந்த அந்த இயக்கத்துக்கு மரண அடி கொடுத்தவர், ''புரட்சித் தலைவி'' என்று ''மார்க்சிஸ்ட்'' தலைமையே ஏற்றுக் கொண்டுவிட்ட தமிழக முதல்வர் ஜெயலலிதாதான்.

என்றாலும் போலிகளின் அந்தத் தொழிற்சங்க இயக்கத்தின் சவப்பெட்டிக்குக் கடைசி ஆணி அறைந்தது உச்ச நீதிமன்றம்தான். ஜெயலலிதாவின் மரண அடியால் வீழ்த்தப்பட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் - ஆசிரியர்களுக்காக உயிர்ப் பிச்சை கேட்டு உச்ச நீதிமன்ற படியேறின இரு போலி கம்யூனிஸ்டுக் கட்சிகள் மற்றும் தி.மு.க. சார்பு தொழிற்சங்கங்கள். ''இந்தியாவின் ஃபிரடெரிக் ஏங்கல்சு'' என்று தொழிற்சங்கப் பிழைப்புவாதி குசேலரின் பட்டம் வாங்கிய ப.சிதம்பரம் கூட அவர்களுக்காக வாதாடினார்.

அப்போது உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்து இதுதான். ''அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது சட்ட விரோதமான செயல். அப்படிச் செய்வதற்கு அரசியல் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் அவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது? வேலை நிறுத்தம் செய்வது தங்கள் பிறப்புரிமை என்று நினைத்துக் கொண்டு இருக்கும் அரசு ஊழியர்களின் போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதற்குத் தமிழக அரசு எடுத்த கடுமையான நடவடிக்கைகள் பாராட்டுக்கு உரியது. தமிழக அரசு சரியான நடவடிக்கைதான் எடுத்து இருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் இதைத்தவிர வேறு வழி இல்லை.''

உச்ச நீதிமன்றம் இதோடு நிற்கவில்லை. ''வேலை நிறுத்தம் என்ற ஆயுதம் எப்போதுமே தவறாகப் பயன்படுத்தப்படுவதால் குழப்பம் ஏற்படுவதோடு நிர்வாகமும் பாதிக்கப்படுகிறது'' என்று சொன்ன நீதிபதிகள் ''முன்பு வக்கீல்கள் வேலை நிறுத்தம் சட்டவிரோதம் என்று இதே கோர்ட்டு அறிவித்தது'' என்பதையும் நினைவுபடுத்தினர்.

மேலும், ''ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக நிர்வாகம் பாதிக்கப்படும் சூழ்நிலையில் அதைச் சரிசெய்ய ஜெயலலிதா அரசு எடுத்த நடவடிக்கை ஒட்டுமொத்த இந்தியாவுக்கே வழிகாட்டியாக அமைந்துள்ளது'' என்றும் கூறியுள்ளனர், நீதிபதிகள். அதோடு ''பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக நிபந்தனையற்ற முறையில் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுப்பதோடு எதிர்காலத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட மாட்டோம் என்று உறுதி அளித்தால் அவர்களை பெருந்தன்மையுடனும் கருணையுடனும் மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ளலாம்'' என்று மாநில அரசாங்கத்துக்குப் பரிந்துரைத்தது உச்ச நீதிமன்றம்.

வேலை நிறுத்தத்தைத் தூண்டியதாகவும், பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவித்து வன்முறையில் ஈடுபட்டதாகவும் குற்றஞ்சாட்டி சிறையிலடைக்கப்பட்டிருந்த 2,200 அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கு இந்தப் பரிந்துரை பொருந்தாது. அவர்கள் மீதான வழக்குகள் தனித்தனியே விசாரித்து வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில் முடிவு செய்து கொள்ளலாம்.

உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தவர்களுக்காக வாதாடிய வழக்கறிஞர்களில் ஒருவரான ப. சிதம்பரம், ''வேலை நிறுத்தம் சட்ட விரோதமானதுதான்'' என்று ஒப்புக் கொண்டுள்ளார். சட்டவிரோதமானதென்று அரசு அறிவித்தபின், அதை ஏற்று வேலைக்குத் திரும்பியவர்கள் தடுக்கப்பட்டார்கள் என்றுதான் முறையிட்டார்.

**காரண காரியமெல்லாம் நீதிமன்றத்திற்குத் தேவையில்லை**

வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கான பின்னணி, காரண காரியம் பற்றியெல்லாம் நீதிமன்றம் பரிசீலிக்கவே இல்லை. எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் காரணத்துக்காகவும் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்பதுதான் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் உட்பட எல்லா மட்டங்களிலுமான நீதிமன்ற நிலைப்பாடாக உள்ளது.

தற்போதைய தமிழ்நாடு அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் போராட்டத்தைப் பொருத்தவரை அவர்கள் புதிதாக எதையும் கோரி, திடீரென்று முன்னறிவிப்பின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவிடவில்லை. கடந்த ஆண்டுவரை அவர்கள் பெற்றுவந்த சில பொருளாதார உரிமைகள் பறிக்கப்பட்டன. இதை ஏற்க மறுத்து, பலமுறை முறையீடு செய்தும், பல்வேறு வடிவங்களில் வலியுறுத்தியும், ஓரிரு முறை பேச்சுவார்த்தைகள் நடத்தியும் அரசின் அடாவடித்தனம், பிடிவாதம், திமிர்த்தனம் காரணமாக இறுதியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதற்குத் தலைமையேற்றவர்கள்தாம் அதைத் தூண்டியதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறார்கள். அதற்கு மாறாக, நிர்வாகம்தான் எப்போதும் வேலை நிறுத்தத்திற்குத் தள்ளுகிறது. வேறு எந்த வகையிலும் தமக்கு நிவாரணம் கிடைக்காது என்ற நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை நிறுத்தம் தவிர வேறென்ன வழி இருக்கிறது?

ஆனால் நீதிமன்றங்களோ, வேலை நிறுத்தத்தில் பணியாளர்கள் தாமே ஈடுபட்டனரா? இல்லை, அதற்குத் தள்ளப்பட்டார்களா என்பதை முக்கியமானதாகக் கருதவில்லை. வேலை நிறுத்தம் உட்பட எப்படிப்பட்ட முறைகளில் வேலை நிறுத்தம் செய்தார்கள், நிர்வாகம் அதைத் தடுப்பதற்கும் ஒடுக்குவதற்கும் என்னென்ன செய்தது என்பதிலும் அக்கறை செலுத்தவில்லை.

நிர்வாகம் என்ன செய்தாலும், என்ன காரணத்துக்காகவும் எப்போதும் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக்கூடாது என்பதுதான் நீதிமன்றங்களின் நிலை. இப்போது பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக நிவாரணம் கோரி வேலை நிறுத்தம் நடந்தது. நாளை பொருளா


படிப்பகம்

www.padippakam.com

தாரம் அல்லாத பிரச்சினைகள் - பணியாளர்கள் தாக்கப்பட்டார்கள், பெண் ஊழியர்கள் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளானார்கள் அல்லது பணி நாட்களும் நேரமும் கூட்டப்பட்டது; கட்டாய வேலை நீக்கம் செய்தார்கள்; வேலைச் சுமை ஏற்றினார்கள் - என்று எதற்காகவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக் கூடாது என்பதுதான் நீதிமன்றங்களின் கருத்து.

அதேசமயம், வேலை நிறுத்தங்களை முறியடிப்பதற்காக அரசு நிர்வாகம் என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் மேற்கொள்ளலாம். அது அடிப்படை மனித உரிமையைக் கூட பறிப்பதாக இருக்கலாம். ஒருவரைக் கைது செய்வதற்கு உச்ச நீதிமன்றமே விதித்துள்ள விதிமுறைகளை மீறி நள்ளிரவில் வீடு புகுந்து பணியாளர்களை இழுத்துக் கொண்டு போய் சிறையிலடைக்கலாம். உருட்டி மிரட்டி வெள்ளைத் தாளில் கையொப்பம் பெறலாம்; குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றலாம்; சாலையோரங்களில், பொது இடங்களில் நிற்கும் பணியாளர்கள் மீது தடியடி நடத்தித் தாக்கி இழுத்துக் கொண்டு போகலாம். இப்படிச் செய்வது , சட்டவிரோதமானது என்றோ, மனித உரிமை மீறலோ அல்ல, பாராட்டுக்குரியது என்று நீதிமன்றங்கள் கருதுகின்றன.




இவ்வாறு நீதிமன்றங்கள் நேரடியாகத் தீர்ப்புக் கூறவில்லைதான். ஆனால் தமிழக அரசின் ''எஸ்மா'' சட்டத்துக்கு எதிரான வழக்கு விசாரணையின் போது நீதிபதிகள் எழுப்பிய கேள்விகளைத் தொகுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் அளித்த இறுதித் தீர்ப்பைக் கவனியுங்கள். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் விசாரணை அடிப்படையில் தீர்ப்புகள் வரவில்லை. போராட்டங்கள் - வேலைநிறுத்தங்கள் குறித்து நீதிபதிகள் கொண்டுள்ள ஒருதலைச் சார்பான, முன்கூட்டியே முடிவு செய்யப்பட்ட கருத்துக்கள்தாம் வெளிப்பட்டிருக்கின்றன.

''வீட்டுக்குச் சென்று, நள்ளிரவில் அரசு ஊழியர்களைக் கைது செய்வதைத் தவிர்க்கவேண்டும். இது அதிகபட்சமான நடவடிக்கை. வீடியோ மூலம் அதை படம் எடுத்துத் தொந்தரவு செய்வதையும் அரசு தடுக்க வேண்டும். தவறு செய்தால் அரசு, துறை ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நள்ளிரவில் கைது போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டால் மற்ற மாநிலங்கள் என்ன நினைக்கும்? இப்பிரச்சினையை தானாக அரசு தீர்க்கும் என்று நினைக்கிறேன்'' என்று முதலாவதாக வழக்கை விசாரித்த நீதிபதி பி.டி. தினகரன் மிகவும் பணிவாகக் கேட்டுக் கொண்டார்.

உயர் நீதிமன்ற நீதிபதியின் இந்த வேண்டுகோளுக்கு, ''எஸ்மா'' சட்டத்தை மேலும் கொடூரமாக்கி, ஒரு இலட்சம் அரசு ஊழியர்களை வேலை நீக்கம் செய்து பதிலளித்தது, ஜெயலலிதா நிர்வாகம். இரண்டாம் நாள் விசாரணையின் போது, ''கைது செய்யப்பட்டுள்ள அரசு ஊழியர்களின் குடும்பத்தினரின் நிலைமையைப் பார்க்க வேண்டும். அவர்களின் மன உளைச்சலையும் தீர்க்கவேண்டும். அரசியல் அமைப்பின் 21-வது பிரிவின்படி அவர்களுக்கு வாழும் உரிமை அளிக்கப்படவேண்டும்; மனித உரிமை பாதுகாக்கப்படவேண்டும்.''

''போராட்டத்தில் கைது செய்யப்பட்ட அரசு ஊழியர்கள் அனைவரையும் அரசு விடுதலை செய்யும் என்று கோர்ட்டு நம்புகிறது'' என்று மேலும் வேண்டுகோள் விடுத்தார் நீதிபதி. கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய முடியாது என்று அடாவடியாக மறுத்த அரசு, மேலும் ஒரு இலட்சம் ஊழியர்களை வேலை நீக்கம் செய்ததோடு பத்தாயிரம் பேரை புதிதாக பணி நியமனம் செய்தது.

### தனிநீதிபதியின் தீர்ப்பு ஒன்றும் முற்போக்கானதில்லை

தனது கோரிக்கைகளை அரசு ஏற்க மறுத்தபோது தனிநீதிபதி ஒரு இடைக்கால உத்திரவு போட்டார். ''கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டும். வேலை நீக்கம் மற்றும் இடைநீக்க உத்தரவுகளை நிறுத்தி வைக்க வேண்டும். புதிய நியமனத்தை நிறுத்தி வைக்க வேண்டும்.''

ஜெயலலிதாவின் அடக்குமுறைகளால் ஒடுங்கிப் போயிருந்த ஊழியர்களும் ஆசிரியர்களும் இத்தீர்ப்பு கேட்டு நிம்மதி அடைந்தனர். ஆனால், அது இரண்டு மணிநேரமே நீடித்தது. தனிநீதிபதி தீர்ப்புக்கு இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வுப் பிரிவு தடை விதித்த போது அதிர்ச்சி அடைந்தனர். தனிநீதிபதி வழங்கிய தீர்ப்பு தமக்குச் சாதகமாக இருந்ததாகவும், அதற்கு விதிக்கப்பட்ட தடை ஏமாற்றமளிப்பதாகவும் பதறிப் போனார்கள், அரசுப் பணியாளர்களும் - ஆசிரியர்களும் அவர்களின் தலைமையும்.

ஆனால் தனிநீதிபதியின் தீர்ப்பு எந்தவகையிலும் முற்போக்கானதோ, போராடியவர்களுக்குச் சாதகமானதோ இல்லை. சிறையிலிருப்பவர்கள் விடுதலையாவதற்கும், மீண்டும் பணியில் சேருவதற்கும் எந்த விலையும் கொடுப்பதற்கு இவர்கள் தயாரான நிலையில், ஜெயலலிதா அரசின் தாக்குதலில் இருந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று சரணடைவதற்கு ஒரு சந்தர்ப்பமாவது கிடைத்தது என்று எண்ணினார்கள் என்பதுதான் உண்மை.

''கைது செய்யப்பட்ட அரசு ஊழியர்கள் சிறை அதிகாரிகளிடமோ, அல்லது வழக்குப் பதிவு செய்த போலீசு அதிகாரிகளிடமோ 'இனிமேல் போராட்டத்தில் ஈடுபட மாட்டோம் என்றும் வேறு யாரையும்


படிப்பகம்



போராடத் தூண்ட மாட்டோம்' என்று உறுதி மொழியும், ஆயிரம் ரூபாய்க்கு பாண்டும் எழுதி அளிப்பவர்கள் மட்டுமே சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டும். இந்த உத்திரவு பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாக வழக்குப் பதிவு செய்யப்பட்டவர்களுக்குப் பொருந்தாது.''

''வேலை நீக்கம் அல்லது இடை நீக்கம் செய்யப்பட்டவர்கள் உறுதி மொழி அடிப்படையில் மீண்டும் பணியில் சேர அரசு அனுமதிக்க வேண்டும். எந்த நிபந்தனையும் இன்றி பணியில் சேர விரும்புபவர்களுக்கு இந்த உத்திரவு பொருந்தாது. வேலை நீக்கம் அல்லது இடைநீக்கம் உத்திரவுகளைத் திரும்பப் பெற அரசு எடுக்கும் முடிவுகளுக்கு இந்த உத்திரவு குறுக்கே நிற்காது. இது ஒரு இடைக்காலத் தீர்ப்புதான். மற்றபடி இந்த வழக்கை உயர் நீதிமன்ற முதல் அமர்வுப் பிரிவு விசாரிக்க வேண்டும்'' - இதுதான் தனி நீதிபதியின் தீர்ப்பு. இது எப்படி அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சாதகமானது? மாறாக, அரசின் அக்கிரமங்களை நீதிபதியே விசாரணையின் போது தெரிவித்திருந்தாலும், தீர்ப்பில் அதற்குரிய நடவடிக்கைகள் - நிவாரணங்கள் இல்லை.

தனிநீதிபதியின் பரிந்துரையிலேயே அமர்வுப் பிரிவு விசாரணைக்கு வழக்கு முன்வைக்கப்பட்டு விட்டது. இடைக்காலத் தீர்ப்பின்படி, உடனடியாக ''மன்னிப்புக் கோரி'' சிறையிலுள்ளவர்கள் வெளியே வந்து விடக் கூடாது; மேலும் சிலநாட்கள் அவர்கள் சிறையில் கிடந்து தவிப்பும் துயரமும் துன்பமும் அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கில் இரண்டே மணிநேரத்தில் தனிநீதிபதியின் தீர்ப்புக்குத் தடை பெறப்பட்டது.

### நீதிபதிகளின் கேள்விக்கென்ன விலை?

அரசின் மேல்முறையீட்டை விசாரித்த உயர் நீதிமன்ற அமர்வுப் பிரிவு, தானே எழுப்பிய கேள்விகள், விளக்கங்கள் மூலம் அரசின் அக்கிரமங்கள் - அநீதிகளைத் தொகுத்துத் தருகின்றது. ''எல்லாக் குற்றங்களையும் ஒரே மாதிரி அரசாங்கம் பார்க்க முடியுமா? குற்றங்கள் உள்ளன; கடுமையான குற்றங்கள் உள்ளன. அரசு ஊழியர்களை நள்ளிரவில் கைது செய்வது ஒரு பாரிய உரிமை மீறலாகும். அவர்கள் கிரிமினல்கள் அல்ல. கைது செய்வதற்கு அதிகாரம் உள்ளது என்பது ஒன்று. ஆனால் அதைப் பிரயோகிப்பது என்பது முற்றிலும் வேறானது'' என்று முதல்நாள் கருத்துத் தெரிவித்தார் தலைமை நீதிபதி.

''ஜூலை 4-ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம், ஜூலை 5-ஆம் தேதிதான் அமலுக்கு வருகிறது. 5,6 தேதிகள் விடுமுறை நாட்கள். ஜூலை 7-ஆம் தேதி அவர்கள் பணிக்கு வருவதை நீங்கள் எதிர்பார்த்திருக்க வேண்டும். ஆனால் அவசரச் சட்டம் பிறப்பித்துவிட்டு, அதேசமயம் பணியாளர்கள் வேலைக்கு வரும் உரிமையை மறுத்துவிட்டீர்கள். பணியாளர்கள் விளக்கமளிப்பதற்கு வாய்ப்பே தராமல் மலிவான முறையில் வேலை நீக்கம் செய்து விட்டீர்கள்.

''அரசாங்கக் குடியிருப்புகளில் இருந்து வரைமுறையின்றி வெளியேற்றுவது வருத்தமளிக்கிறது. இது போன்று ஒரே ஒரு பணியாளரை வெளியேற்றுவது கூட நல்லதல்ல. அவர்கள் எங்கே போவார்கள்? சேவை என்ற அம்சத்துக்கு மேலே, மனிதத் தன்மை இல்லையா? வேலை நீக்கத்துக்குக் குறைவாக எந்த ஊழியருக்காவது தண்டனை வழங்கிய விவகாரம் உண்டா? எல்லா 4 இலட்சம் ஊழியர்களும் ஒரே அளவிலான 'நடத்தைத் தவறுதலை' புரிந்திருக்க முடியாது. பல நூறுபேர் வேலைக்கு வராமல் மற்றவர்களால் தடுத்திருக்கப்பட்டிருப்பர். அவசரச் சட்டத்தின்படி நியமன அதிகாரியிடம் மேல் முறையீடு செய்யலாம். ஆனால், அரசாங்கமே பணிநீக்க உத்திரவு போட்டிருக்கும் போது, அதற்கு மாறாக அதிகாரிகள் முடிவு எடுப்பார்களா?

''இது ஒரு மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அல்ல; அதாவது சட்ட வழக்குமன்றமல்ல; ஒரு நீதிமன்றமாகும். 4 இலட்சம் அரசு ஊழியர்களை ஒட்டு மொத்தமாக வேலை நீக்கம் செய்யும்போது அறிவைச் செலுத்தி முடிவெடுத்திருக்க முடியுமா? அதாவது, அது அறிவார்ந்த செயல்தானா?''

உயர் நீதிமன்றத்தின் இந்தக் கேள்விகளும் கருத்துக்களும் எவ்வளவு விலை மதிப்புடையவை என்று நமக்குத் தெரியாது. யாரையும் விலைக்கு வாங்கிவிட முடியும் என்று எண்ணும் ஜெயலலிதா அரசாங்கத்துக்கும், உயர் நீதிமன்றத்துக்கும்தான் தெரியும். இந்தக் கேள்விகள், உண்மையில் மறைமுகக் கருத்துக்களும் கொண்டிருக்கின்றன. நீதிமன்ற அகராதியின்படி பதிலை உள்ளடக்கிய கேள்விகள்.

ஆனால் தீர்ப்பில், இந்தக் கேள்வியில் பொதிந்துள்ள பதில்களும் கருத்துக்களும் பிரதிபலிக்கவில்லை. நீதியும் இடம் பெறவில்லை. ஒரு மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அதாவது சட்ட வழக்குமன்றத் தீர்ப்புதான் இருந்தது. ''பிறப்பிக்கப்பட்டுள்ள ''எஸ்மா'' ''டெஸ்மா'' சட்டங்களின் மீதானமுறையீடு மாநில தீர்ப்பாயத்திடம்தான் போகவேண்டும். நேரடியாக உயர் நீதிமன்றத்துக்கு வந்திருக்கக் கூடாது'' என்று உயர் நீதிமன்றம் இறுதித் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பின்படி வன்முறையில் ஈடுபட்டவர்கள் தவிர, மற்றபடி கைதானவர்கள் மன்னிப்பு மற்றும் உறுதிமொழி கொடுத்தால் விடுதலை செய்யப்படலாம் என்பதுதான் பணியாளர்களுக்கு ஆறுதல் தரும் ஒரே அம்சம் என்று கூறப்பட்டது.

ஆனால், இதுவும் கூட உண்மையல்ல. புதிய அவசரச் சட்டப்படி ஒரு வாரத்துக்குள் அரசு அதிகாரிகளிடம் முறையிட்டு, விளக்கமளிக்க வேண்டும். அப்படிச் செய்வதற்கும் வேலை உத்திரவாதமில்லாமலேயே, அவசரச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கு நிர்ப்பந்திக்கவும் வேண்டி அவர்கள் விடுதலை செய்யப்பட்

www.padippakam.com

டார்கள். அரசு ஊழியர் - ஆசிரியர்களிடையே பயபீதி - ஊசலாட்டத்தை ஏற்படுத்தி சங்கங்களைப் பிளவுபடுத்தும் அரசின் நோக்கத்திற்குத்தான் வழக்கு எதையும் விலக்கிக் கொள்ளாமலே இந்த விடுவிப்பு.

இந்த வழக்கில் மத்திய அரசையும் பிரதிவாதியாகச் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்று பணியாளர்கள் சார்பாக கோரியபோது, ''அப்படிச் செய்தால் 2 வாரம் வரை கால தாமதம் ஏற்படும். 13 இலட்சம் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட விஷயம். இந்த வழக்கை உடனே விசாரித்துத் தீர்ப்புக் கூற வேண்டும். எனவே இந்த விஷயத்தில் 13 நிமிடத்தைக் கூட தாமதப்படுத்த மாட்டோம். வக்கீல்கள்வாதம் முடிந்துவிட்டால் உடனே தீர்ப்புக் கூறத் தயாராக இருக்கிறோம்'' என்று சொன்ன சுபாஷண்ரெட்டி தலைமையிலான ''டிவிசன் பெஞ்ச்'' அப்படிச் செய்யவில்லை. வக்கீல்கள் வாதம் முடிந்ததும் நாள் குறிப்பிடாமல் தீர்ப்பைத் தள்ளிவைத்தது.

இப்போது எங்கே போனது அந்த அவசரம்? இரண்டு நாட்களுக்குப் பிறகு வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு மேல் தீர்ப்புக் கூறப்பட்டது. இந்த இரண்டு நாட்களின் விலை மதிப்பு என்ன என்பதும் நமக்குத் தெரியாது. ஜெயலலிதா அரசாங்கத்துக்கும் உயர் நீதிமன்றத்துக்கும்தான் தெரியும். வெள்ளிக்கிழமை மாலை போலீசு கைது செய்வதும், நீதிமன்றம் தீர்ப்புச் சொல்வதும் எதற்காக என்பது, விவரம் அறிந்தவர்களுக்குத் தெரியும். கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக பிணையில் வெளிவரவும், பாதகமான தீர்ப்புப் பெற்றவர்கள் உடனடியாக மேல்முறையீடு செய்வதற்கும் உள்ள வாய்ப்பு மறுக்கப்படும் என்பதுதான், இவற்றில் உள்ள சிறப்பு.

விசாரணையிலும், தீர்ப்பிலும் இவ்வளவு அக்கறை காட்டிய உயர் நீதிமன்ற ''டிவிசன் பெஞ்ச்'' கடைசியில் என்ன தீர்ப்பு வழங்கியது தெரியுமா? இந்த வழக்கை விசாரிக்க முடியாது என்று தள்ளுபடி செய்வதுதான்! சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு பிழையானது என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. ''அசாதாரணமான சூழ்நிலைமைகளில் அசாதாரணமான அதிகாரத்தை, அடிப்படை உரிமை சம்பந்தப்பட்ட ரிட் மனுக்களை விசாரிக்கும் அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பிரயோகித்திருக்க வேண்டும்.''

''வேலை நீக்கம் செய்யப்பட்ட அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 2,200 பேரைத் தவிர மற்றவர்களிடம் ''சட்டவிரோதமான இந்த வேலை நிறுத்தத்தில் பங்கேற்றது குற்றம்தான்'' என்று ஒப்புக் கொண்டு, நிபந்தனையில்லா மன்னிப்புக் கேட்டும், இனி அரசு ஊழியர் நடத்தை விதிகளைப் பற்றி ஒழுகி, வேலை நிறுத்தம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டோம் என்று உறுதி மொழியும் எழுதிக் கொடுக்கும் பணியாளர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளவேண்டும்'' என்று உத்திரவு போட்டது.

இதை ஏற்றுக் கொண்ட ஜெயலலிதா அரசு வழக்கறிஞர், ''சிறையிலடைக்கப்பட்ட 2,200 பேரோடு முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்படாமல் இருக்கும் பணியாளர்களையும், வன்முறையிலும், முறைகேடான நடத்தையிலும் ஈடுபட்டவர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம்'' என்று கூறினார். ''இது பழிவாங்குதலுக்கு வழி வகுக்கும்'' என்று பணியாளர்கள் சார்பில் வழக்கறிஞர் வாதிட்டார். ''அப்படிச் செய்தால் விளைவு வேறுமாதிரி இருக்கும்'' என்றனர் நீதிபதிகள்.

ஆனால், ஜெயலலிதா அரசு அடுத்த நாளே பழிவாங்கும் செயலில் இறங்கிவிட்டது; மன்னிப்புக் கடிதத்தோடு பணிக்குத் திரும்பியபோது, ''உங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவாகி உள்ளது, கைது செய்யமுடியாமல் தலைமறைவாகி விட்டீர்கள், எனவே உங்களை பணியில் சேர்த்துக் கொள்ள முடியாது'' என்று கூறிவிட்டது. இதுபோல ஆயிரக்கணக்கான பணியாளர்கள் மாவட்டந்தோறும் விரட்டப்பட்டு விட்டனர்.

**தீர்ப்புகள் வேறுவேறு; அடிப்படை ஒன்றுதான்! தொழிலாளர்களை கொத்தடிமையாக்குவதுதான் அது!**

உயர் நீதிமன்றத்தின் தனிநீதிபதி, அதன் ''டிவிசன் பெஞ்ச்'' நீதிபதிகள் மற்றும் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் வேறு வேறு விதமாக இருந்தாலும், எல்லா மட்டங்களிலும் ஒரே கருத்தைப் பொதுவாக வலியுறுத்தித் தீர்ப்புக் கூறியுள்ளனர். ''வேலை நிறுத்தம் என்பது மாபெரும் குற்றம். அதற்கான சட்டபூர்வ உரிமை எதுவும் கிடையாது. அப்படிச் செய்வது அரசையே உருட்டி மிரட்டுவதும் சட்டவிரோதமானதும் ஆகும். அதேசமயம் நிர்வாகம் எந்தவிதமான ஒடுக்குமுறை - உரிமைப் பறிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளும் அதிகாரம் பெற்றது.'' மொத்தத்தில் அரசு ஊழியர்களும் - ஆசிரியர்களும் கொத்தடிமைகளாக மாறிவிட வேண்டும் என்று சொல்லவில்லை, தீர்ப்பாக உத்திரவிட்டுவிட்டது. போராடுபவர்கள் ஒடுக்குமுறையால் நொந்து நூலாகி உச்ச நீதிமன்றத்துக்கே போனாலும், அது, ஜெயலலிதாவின் பாதாரவிந்தங்களில் சரணடையுங்கள்; ''மோட்சம்'' கிடைக்கும் என்று அறிவுரை கூறுகிறது.

இப்படித்தான் போக்குவரத்துத் தொழிலாளர்கள், மாணவர்கள், வழக்கறிஞர்கள் ஆகிய எந்தத் தரப்பினர் போராடினாலும் அது தவறென்று அறிவுரை வழங்குவதும் மிரட்டுவதுமாக நீதிமன்றம் சட்டாம்பிள்ளைத்தனம் செய்கிறது. அரசுத்துறை மிகவும் இன்றியமையாதது, அதன் பணிகள் பாதிக்கப்படக் கூடாது என்கிற

தொடர்ச்சி 24-ஆம் பக்கம்

படியுங்கள்
அரசு ஊழியர் - ஆசிரியர்களின் தோல்வி:
பாசிச ஜெயாவை ஜெயிக்க முடியாதா?
விலை: ரூ. 5.00


வெளியீடு:
ம.க.இ.க. - பு.மா.இ.மு. - வி.வி.மு. - பு.ஜ.தொ.மு.
கிடைக்குமிடம்
புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி,
110/63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

www.padippakam.com

# வாஜ்பாயியின் முகமும் முகமூடியும்

பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு, கடந்த ஜூன் மாதம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்புக் கூட்டமொன்றில், ''வாஜ்பாயி வளர்ச்சிக்கு வழிகாட்டும் மனிதர்; அத்வானி - இரும்பு மனிதர்'' என வருணித்ததோடு, ''வாஜ்பாய், அத்வானி இருவரையும் முன்னிறுத்தி பா.ஜ.க., தேர்தலைச் சந்திக்கும்'' என்றார். அடுத்த சில தினங்களில் இதற்குப் பதில் அளிக்கும் விதமாகப் பேசிய வாஜ்பாயி, ''அத்வானியின் தலைமையில் நாம் வெற்றியை நோக்கி நடைபோடுவோம்'' எனப் பொடி வைத்தார்.

வாஜ்பாயியின் இந்த அடி வெட்டால் ஆடிப் போன வெங்கையா நாயுடு, ''அடல்ஜிதான் அடுத்த தேர்தலிலும் கட்சியை வழி நடத்துவார்'' என சமரசக் கொடியைத் தூக்கினார். வெங்கையா நாயுடுவின் பத்திரிகை நேர்காணலை மறுத்துப் பேசாத அத்வானி, அவரின் சமரசத்தை ஆமோதித்தார். ''வாஜ்பாயியை ஆதரிப்பதாக'' அறிக்கை கொடுத்துவிட்டு சமரசம் பண்ணி வைத்த ஆர்.எஸ்.எஸ்., ''சித்தாந்தம்தான், கொள்கைதான் முக்கியமானது; தனிநபர் துதி பாடக்கூடாது'' என்ற உபதேசத்தையும் அவிழ்த்துவிட்டது.

இந்த வாஜ்பாயி - அத்வானி சர்ச்சை ஓய்ந்த சில நாட்களிலேயே, பா.ஜ.க.வையும், வாஜ்பாயியையும் திட்டி, ஒரு லாவணிக் கச்சேரியை விசுவ இந்து பரிசத் நடத்தியது. அயோத்தி பிரச்சினையில் மீண்டும் சமரசத் தூதுவன் வேடம் போட்டுக் கொண்டு சங்கராச்சாரி நுழைந்தவுடனேயே, ''அயோத்தி இயக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சியைப் பிடித்துள்ள பா.ஜ.க., ராமர் கோயில் கட்டுவதற்குச் சாதகமாக சட்டம் கொண்டு வர மறுக்கிறது; முசுலீம்களோடு சமரசப் பேச்சு வார்த்தை நடத்துவதன் மூலம் பா.ஜ.க., இந்த இயக்கத்திற்கு துரோகம் செய்கிறது'' என வி.இ.ப., பா.ஜ.க. மீது குற்றம் சுமத்தியது.

''வாஜ்பாயியால் ராமர் கோவில் கட்டுவதற்குச் சாதகமாகச் சட்டம் கொண்டுவர முடியாவிட்டால், அவர் பதவி விலகட்டும்.

''பாரதிய ஜனதாக் கட்சியிலேயே அயோத்தி இயக்கத்தை ஆதரிக்காத ஒரே தலைவர் வாஜ்பாயிதான். நாங்கள், அத்வானியைத்தான் ஆதரிக்கிறோம். அத்வானி தலைவராக வந்துவிட்டால் ராமர் கோயில் கட்ட தீவிரமாக முயற்சி செய்வார்.''

''அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்டவும், இந்து ராஷ்டிரத்தை அமைக்கவும் நோக்கங்கொண்ட ஒரு புதிய இந்துத்துவக் கட்சியை உருவாக்க வேண்டும். ஏனென்றால், பா.ஜ.க., அதனின் சொந்தத் திட்டத்தைக் கை கழுவி விட்டது. தேசிய ஜனநாயகக் கூட்டணியின் திட்டத்தைதான் நடைமுறைப்படுத்துகிறது.''

- இப்படி வி.இ.ப. தலைவர்களான அசோக் சிங்காலும், பிரவீண் தொகாடியாவும், வாஜ்பாயிக்கும் அத்வானிக்கும் இடையேயும், வாஜ்பாயிக்கும் சங்கப் பரிவார அமைப்புகளிடையேயும் ஏதோ கருத்து முரண்பாடுகளும், கொள்கை வேறுபாடுகளும் இருப்பது போலக் காட்டிக் கொண்டு, சண்டை நடப்பது புதிய விசயமல்ல; பா.ஜ.க.வில் அத்வானி கோஷ்டி, வாஜ்பாயி கோஷ்டி என்ற இரு பெரிய கோஷ்டிகள் இருப்பது ஊரறிந்த உண்மை. நீண்ட நாட்களாகவே நடந்து வரும் இந்தக் குழுச் சண்டைக்கு ''இரும்பு மனிதர்'', ''வளர்ச்சிக்கு வழி காட்டும் மனிதர்'' எனக் கொள்கை முலாம் பூசினார், வெங்கையா நாயுடு.

வெங்கையா நாயுடு பத்திரிகையாளர்களிடம் கூறியதை, ''கட்சிக்குள் இந்து தீவிரவாதிகளின் கை ஓங்க ஆரம்பித்துவிட்டதாக'' பல பத்திரிகைகள் உசுப்பேற்றின. ஆர்.எஸ்.எஸ். பிராண்ட் இந்துத்துவத்தை எதிர்க்கும் ''இந்து'' நாளிதழ் கூட, ''குஜராத் பரிசோதனைக்குப் பின் தீவிரவாதிகளுக்கு வாஜ்பாய் தேவைப்படவில்லை'' என எழுதியது. ''இந்து'' குடும்பப் பத்திரிகையான ஃப்ரண்ட்லைன், ''அயோத்தி பிரச்சினையில் வாஜ்பாயி தீவிரவாதிகளை ஓரங்கட்ட விரும்பினார்'' எனக் குறிப்பிட்டது.

இந்து மதவெறியர்களை எதிர்க்கும் சட்டபூர்வ மதச்சார்பற்ற சக்திகள் பலவும், சங்கப் பரிவார அமைப்புகளுக்குள்ளேயே, மிதவாதப் பிரிவு, தீவிரவாதப் பிரிவு என இரு பிரிவுகள் இருப்பதாகவும், வாஜ்பாயி மிதவாதப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதாகவும் திரும்பத் திரும்ப எழுதி வருகின்றன. வாஜ்பாயியை மிதவாதியாகக் காட்ட, அவர் பாபர் மசூதி இடிக்கப்பட்டபொழுது ஒரு கண்ணீர் கவிதை எழுதியதில் தொடங்கி, அவர் சமீபத்தில் அயோத்தி பிரச்சினையைத் தீர்க்க காஞ்சி சங்கராச்சாரி மூலம் பேச்சு வார்த்தை நடத்த முயன்றது வரை பல உதாரணங்களை எடுத்துக் காட்டுகிறார்கள்.




இப்படி ''மிதவாதியாக'' கூறப்படும் வாஜ்பாயி, ''அயோத்தி கோயில் என்பது நிறைவேறாமல் இருக்கின்ற தேசியக் கனவு'', ''மத மாற்றம் குறித்து தேசிய விவாதம் தேவை'', ''பெரும்பான்மையினரின் நல்லெண்ணத்தைப் பெறுவதுதான் சிறுபான்மையினருக்கு உண்மையானப் பாதுகாப்பு'' என்றெல்லாம் தீவிரவாதிகளைப்

www.padippakam.com


போலவும் பேசியிக்கிறார். வாஜ்பாயியின் இந்தத் தீவிரவாதப் பேச்சுக்களையெல்லாம், வாய் தவறி வந்து விட்டதாக எடுத்துக் கொள்ள முடியுமா?

ராமர் கோயில் பிரச்சினையை மட்டும் பேசி, உ.பி. மாநில அதிகாரத்தையே வெல்ல முடியாதபொழுது, மைய அதிகாரத்தைப் பிடிப்பது குதிரைக் கொம்பானது என்பதை ஆர்.எஸ்.எஸ்., பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின் நடந்த வடமாநிலத் தேர்தல்களின் பொழுதே புரிந்து கொண்டது. நாடு தழுவிய அளவில் இந்து மதவெறித் திட்டங்களை நிறைவேற்ற மைய அதிகாரத்தைப் பிடிக்க வேண்டிய அவசியத்தினால், பா.ஜ.க. கூட்டணி அரசியலில் குதித்தது. இந்து மதவெறி முகத்தைக் காட்டிக் கொண்டு கூட்டணி அரசியலை நடத்த முடியாது என்பதால், அதற்கு மிதவாத முகமூடி தேவைப் பட்டது.

மக்களைக் கவர, தங்களின் கொள்கைக்கே எதிரான முகமூடிகளை மாட்டிக் கொள்வது பாசிஸ்டுகளுக்குக் கைவந்த கலை. ஆரிய இனவெறி பிடித்த இட்லரின் நாஜி கட்சி தேசிய சோசலிசம் பேசியது போல, அவசர நிலை பேயாட்சி நடத்திய இந்திரா ''வறுமையை ஒழிப்போம்'' என்ற கவர்ச்சிகரமான முழக்கத்தின் பின் ஒளிந்து கொண்டது போல, இந்து மதவெறி பிடித்த ஆர்.எஸ்.எஸ்., மிதவாத முகமூடியை மாட்டிக் கொண்டது. ரத யாத்திரையில் பவனி வந்த அத்வானி தீவிரவாதியாக அம்பலப்பட்டு விட்ட நிலையில், கவிஞர் வாஜ்பாயிக்கு இந்த முகமூடி கனக் கச்சிதமாகப் பொருந்தியது.

இது ஒருபுறமிருக்க, காங்கிரசோடு கூட்டணி சேர முடியாத, அல்லது காங்கிரசை எதிர்த்து அரசியல் நடத்த வேண்டிய மதச்சார்பற்ற ஓட்டுக் கட்சிகளுக்கும், பா.ஜ.க.வோடு கூட்டணி சேர இந்த முகமூடி பயன்பட்டது. காலப்போக்கில் இந்த முகமூடி, வாஜ்பாய், ஆர்.எஸ்,எஸ்.-ஐ விட, அவர்களோடு கூட்டணி சேர்ந்துள்ள மதச்சார்பற்ற ஓட்டுக் கட்சிகளுக்குத் தான் அவசியமானது.

கூட்டணி ஆட்சியைப் பயன்படுத்திக் கொண்டு வாஜ்பாயி, அயோத்தியில் பாபர் மசூதி வளாகத்தை ஒட்டியுள்ள நிலத்தை, ராமர் கோயில் கட்ட வி.இ.ப.விடம் கொடுக்க முயன்றது; பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் அத்வானி மீது சுமத்தப்பட்டுள்ள கிரிமினல் குற்றங்களை நீர்த்துப் போகச் செய்தது; கல்வியைக் காவிமயமாக்கி வருவது - இப்படி ஒவ்வொரு முறையும் வாஜ்பாயி முகமூடி கழண்டு விழும் போதெல்லாம், இவர்களே முந்திக் கொண்டு அதற்கு முட்டுக் கொடுக்கிறார்கள். ''வாஜ்பாயி, கூட்டணிக் கட்சிகளின் நிர்ப்பந்தத்துக்கு அடிபணிந்து விட்டதாக'' வி.இ.ப., கூச்சல் போடும் பொழுது, கூட்டணி கட்சிகள், ''ஆர்.எஸ்.எஸ். வாஜ்பாயியை நிர்ப்பந்திப்பதாக'' அவர் மீது அனுதாபப்படுகிறார்கள்.




சுதந்திரப் போராட்ட சமயத்தில், காங்கிரசின் மோசடிகளை அம்பலப்படுத்தி முறியடிக்க திராணியற்ற போலி கம்யூனிஸ்டுகள், காங்கிரசுக்குள் முற்போக்கு முகாமைத் தேடி வால் பிடித்ததைப் போலதான் இப்பொழுதும் நடக்கிறது. இந்து மதவெறி பேயாட்டத்தை எதிர்த்து நிற்கத் திராணியற்ற சட்டபூர்வ மதச்சார்பற்ற சக்திகள், ஆர்.எஸ்.எஸ்.க்குள் மிதவாதத்தைக் கண்டுபிடித்து, முட்டுக் கொடுக்கிறார்கள். நேரு சோசலிச சிற்பியாக முதலாளித்துவ பத்திரிகைகளால் புகழப்பட்டதைப் போல, இப்பொழுது வாஜ்பாயி, மிதவாதியாகக் காட்டப்படுகிறார்.

அயோத்தி பிரச்சினையைப் பொருத்தவரை, ''நீதிமன்றத் தீர்ப்பு வரட்டும்'' என முசுலீம்கள் கூட அதை ஒதுக்கி வைத்து விட்டார்கள். ஆனால், பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலால் இந்தப் பிரச்சினையைப் பேசாமல் காலத்தை ஓட்ட முடியாது. அதனால், இந்து மதவெறி அமைப்புகள் ராமர் கோயில் விவகாரத்தை முன் வைத்துத் தங்களுக்குள்ளேயே ஒரு மோதல் நாடகத்தை நடத்திக் கொண்டு, அதைச் சூடாக்குகிறார்கள். குறிப்பாக, தேர்தல் நெருங்கும் போதெல்லாம், வாஜ்பாயியை வில்லனாகக் காட்டும் இந்த அயோத்தி நாடகம் நடத்தப்படுகிறது.

அயோத்தியில் நடந்துவரும் அகழ்வாராய்ச்சியில் தங்களுக்குச் சாதகமாக எதுவும் கிடைக்கவில்லை என்ற நிலையில்தான், காஞ்சி சங்கராச்சாரி சமரசத் தூதுவனாக இறக்கிவிடப்பட்டார். உடனே, வி.இ.ப., முசுலீம்களோடு பேசுவதன் மூலம் வாஜ்பாயி துரோகமிழைப்பதாகக் கூப்பாடு போட்டது. அயோத்தியில் பாபர் மசூதி வளாகத்தை ஒட்டியுள்ள 67 ஏக்கர் நிலத்தை வி.இ.ப.க்குக் கொடுக்கக் கூடாது என்பதுதான் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு. இந்த நிலத்தை வி.இ.ப.க்குக் கொடுங்கள் என்பதுதான் காஞ்சி சங்கரனின் சமரசத் திட்டம். இதில் துரோகம் எங்கே இருக்கிறது? சதிதான் இருக்கிறது. இந்தச் சதியை அம்பலப்படுத்தாத பத்திரிகைகள், வாஜ்பாய் - வி.இ.ப., 'மோதலை', தீவிரவாதிகளுக்கும், மிதவாதிகளுக்கும் இடையிலான மோதலாக ஊதிப் பெருக்கின. இச்சதித் திட்டத்தை முசுலீம்கள் நிராகரித்தவுடன், ''முசுலீம்கள் சமரசத்துக்கு ஒத்து வர மாட்டார்கள்'' என முழுப் பழியும் அவர்கள் மீது போடப்பட்டது.

ஒருபுறம், கூட்டணி அரசியலின் நிர்ப்பந்தம் காரணமாக, கிழிந்து போன முகமூடியை மீண்டும் மீண்டும் மாட்டிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் ஆர்.எஸ்.எஸ். சிக்கிக் கொண்டிருக்கிறது. இன்னொருபுறம், இந்து மதவெறிக்கும், தாராளமயத்திற்கும் எதிராக மக்கள் மத்தியில் இருந்து கிளம்பும் தன்னெழுச்சியான எதிர்ப்புகளை, தாங்களே விழுங்கிக் கொள்வதற்கு வசதியாகவும், ஆர்.எஸ்.எஸ். இந்த முகமூடியைப் பயன்படுத்துகிறது. இதற்காகவே, ஆர்.எஸ்.எஸ்.க்குள் மிதவாதப் பிரிவு இருப்பது போலவும்; ஆர்.எஸ்.எஸ். சுதேசியை ஆதரிப்பது போலவும் காட்டப்படுகிறது. மதச்சார்பற்ற ஓட்டுக் கட்சிகளும், 'தேசிய'ப் பத்திரிகைகளும் இந்த முகமூடிக்கு முட்டுக் கொடுப்பதால்தான், ஆர்.எஸ்.எஸ். நடத்தும் இந்த நாடகம், ஐந்து ஆண்டுகளாகத் தாக்குப் பிடித்து ஓடிக் கொண்டிருக்கிறது.

● சுப்பு


படிப்பகம்

www.padippakam.com

# குஜராத் இனப்படுகொலை வழக்குகள்:

# தயார் நிலையில் தீர்ப்பு

''என் முன்னே இருந்தது இரண்டே வழிகள்தான். ஒன்று கொல்லப்பட்ட என் குடும்பத்தினருக்கு நீதி கிடைக்கச் செய்வது அல்லது உயிரோடு எஞ்சியிருக்கும் குடும்பத்தினரைக் காப்பாற்றுவது.''

கடந்த ஆண்டு நடந்த குஜராத் இனப்படுகொலையின் மீது தற்போது நடைபெற்று வரும் அனைத்து வழக்கு விசாரணைகளிலும் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்ட முசுலீம்களின் மனநிலையைப் பட்டவர்த்தனமாக பிரதிபலிக்கும் இக்கூற்றைச் சொன்னவர், பெஸ்ட் பேக்கரி வழக்கின் முக்கிய சாட்சியான ஜஹிரா ஷேக்.

சென்ற ஆண்டு கோத்ரா இரயில் எரிப்பு சம்பவத்தையடுத்து மார்ச் ஒன்றாம் தேதி பரோடா நகரிலுள்ள பெஸ்ட் பேக்கரியை 700-க்கும் மேற்பட்ட இந்து மதவெறியர்கள் சூறையாடினர். அப்பேக்கரியில் இருந்தவர்களைக் கொன்று தீயிட்டுக் கொளுத்தினர். இதில் பெஸ்ட் பேக்கரியின் உரிமையாளரான ஷேக்கின் குடும்பத்தினர் மற்றும் 3 'இந்து'க்கள் உட்பட 14 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இத்தாக்குதலிலிருந்து தப்பிய ஷேக்கின் மகளான ஜஹிரா ஷேக் போலீசில் வழக்குப் பதிவு செய்தார். அதில் பெஸ்ட் பேக்கரி மீது நட்த்தப்பட்ட தாக்குதலை விவரித்ததோடு, கொலையாளிகளின் பெயர்களையும் குறிப்பிட்டிருந்தார். அதன் அடிப்படையில் போலீசு 21 பேரைக் குற்றவாளிகளாகக் கைது செய்தது. குஜராத் இனப்படுகொலையைப் பற்றி நேரில் ஆய்வு நடத்திய தேசிய மனித உரிமை ஆணையம் மற்றும் தேர்தல் ஆணையத்திடமும் கொலையாளிகளை அடையாளம் காட்டியதோடு, அவர்கள் தண்டிக்கப்படும் வரை தான் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்றும் அறிவித்தார் ஜஹிரா.

இந்த ஆண்டு மே மாதத்தில் பெஸ்ட் பேக்கரி வழக்கு விசாரணை தொடங்கியது. ஜூன் 17-ஆம் தேதி பரோடா விரைவு நீதிமன்றத்தில் விசாரணை நடந்தபோது இவ்வழக்கின் முக்கிய சாட்சியான ஜஹிரா ஷேக், 'இச்சம்பவத்தைத்தான் நேரில் பார்க்கவே இல்லை' என்று பிறழ்ந்து வாக்குமூலம் அளித்தார். 120 பேர் சாட்சிகளாக சேர்க்கப்பட்டிருந்த இவ்வழக்கில் 73 பேர் மட்டுமே விசாரணைக்கு வந்திருந்தனர். அவர்களுள் 41 பேர் ஜஹிராவைப் போலவே பிறழ்ந்து சாட்சியளித்தனர்.

அரசு தரப்பு வழக்குரைஞரான ரகுவீர் பாண்டியா சாட்சிகள் பிறழ்ந்து பேசுவதைப் பார்த்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. இந்த மாற்றத்தைக் கவனிக்குமாறு நீதிமன்றத்துக்கு ஒரு கோரிக்கையைக் கூட வைக்கவில்லை. இதனடிப்படையில் ஜூன் 27-ஆம் தேதி பரோடா விரைவு நீதிமன்ற நீதிபதி மஹிதா, குற்றம் சாட்டப்பட்டிருந்த 21 பேரையும் நிரபராதிகளெனக் கூறி விடுவித்தார்.

இத்தீர்ப்புக்குப் பின் பரோடா நகரில் 'காணாமல் போன' ஜஹிரா சில நாட்கள் கழித்து 'நீதி மற்றும் அமைதிக்கான குடிமக்கள்' **(Citizens for Justice and Peace)** முதலான மனித உரிமை அமைப்புகளின் பின்னணியில் மும்பையில் பத்திரிக்கையாளர்களைச் சந்தித்தார். அப்போது பரோடா நீதிமன்றத்தில் தான் பொய் சொன்னதாகவும், அவ்வாறு சொல்லும்படி பல வழிகளில் தான் மிரட்டப்பட்டதாகவும் நடந்தவற்றை விவரித்தார்.

**14 உயிர்களோடு கொளுத்தப்பட்ட பெஸ்ட் பேக்கரி; இந்து மதவெறி பயங்கரவாதத்தின் சாட்சி.**



''குற்றவாளிகளாக நிற்பவர்கள் உண்மையில் ஷேக்கின் குடும்பத்தைக் காப்பாற்ற வந்தவர்கள்'' என்று சாட்சி சொன்ன லால் முகமது, ஜஹிராவின் பக்கத்து வீட்டுக்காரன். நீதிமன்றத்தில் ஜஹிரா உண்மையைச் சொல்லக் கூடாதென்று லால் முகமது பலமுறை மிரட்டியுள்ளான். பா.ஜ.க.வின் சட்டமன்ற உறுப்பினரான மது ஸ்ரீவத்சவா, காங்கிரசு கவுன்சிலரான சந்திரகாந்த் ஸ்ரீவத்சவா இருவரும் நீதிமன்ற வளாகத்தில் சாட்சி சொல்லுவதற்கு முன்பு ஜஹிராவை நேரடியாக அச்சுறுத்தியுள்ளனர். சந்திரகாந்த் ஸ்ரீவத்சவா, ''நீ எங்கள் பக்கம் சேரவேண்டும். நான் சொன்னபடி கேள். போலீசுக்கு லஞ்சம் கொடுத்தாச்சு. உன்னுடைய வக்கீலும் இப்போது எங்கள் பக்கம்தான். என்ன சொல்லப் போகிறாய் என்று யோசித்துக் கொள்! இல்லாவிட்டால் பின்னர் வருத்தப்பட வேண்டியிருக்கும்'' என்று எச்சரிக்கை விடுத்தான்.

''எனக்காக வாதாட அரசு தரப்பு வக்கீல் ஒருவர் இருப்பதே அன்றைக்குத்தான் தெரியும். நீதிமன்ற வளாகம் முழுவதும் பஜ்ரங் தள் தொண்டர்கள் குவிந்து கிடந்தனர். நான் மிகவும் அச்சத்தில் இருந்தேன். அவர்கள் எதிர்பார்த்தபடி பொய் சொல்வதைத் தவிர வேறு வழியே தெரியவில்லை'' என்கிறார் ஜஹிரா.

ஜஹிராவின் நிலைமைதான் ஃபாகிர் முகமதுக்கும். கோத்ரா இரயில் எரிப்பு சம்பவத்துக்குப் பிறகு நடந்த இந்துவெறியர்களின் தாக்குதலில் தேகாம் தாலுகாவிலுள்ள பிம்பளாஜ் கிராமத்திலிருந்த மசூதி இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. ஃபாகீர் முகமதுக்குச் சொந்தமான பண்ணை வீடு சூறையாடப்பட்டது. பெஸ்ட் பேக்கரி வழக்கில் தீர்ப்பு சொல்லப்பட்ட அதே ஜூன் 27-ஆம் தேதி காந்திநகர் விரைவு நீதிமன்றத்தில், ஃபாகிர் முகமது உட்பட 14 சாட்சிகள் பிறழ்ந்து அளித்த வாக்குமூலத்தால் குற்றவாளிகளான 22 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

குஜராத் இனப்படுகொலையில், மத்திய புலனாய்வு துறையால் விசாரணை நடத்தப்பட வேண்டிய முக்கி



படிப்பகம்

www.padippakam.com

யமான வழக்குகள் என்று தேசிய மனித உரிமை ஆணையத்தால் குறிக்கப்படும் பெரிய வழக்குகளிலும் இதே நிலைமைதான்.

குஜராத் இனப்படுகொலைகளிலேயே மிகக் கொடூரமானது என வர்ணிக்கப்படுவது நரோடா பாட்டியா தாக்குதல். 89 பேர் படுகொலை செய்யப்பட்ட இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இந்துவெறியர்கள் 54 பேரில் 51 பேர் ஜாமீனில் வெளிவந்துவிட்டனர். 38 பேர் கொல்லப்பட்ட சர்தார்புரா வழக்கில் குற்றவாளிகளான 32 பேரும் சில மாதங்களிலேயே ஜாமீனில் வெளிவந்துவிட்டனர். முன்னாள் மக்களவை உறுப்பினரும், காங்கிரசு தலைவருமான இர்பான் ஜாஃப்ரி உட்பட 42 பேர் கொல்லப்பட்ட குல்பர்க் சொசைட்டி வழக்கிலும் கைதான 28 பேரில் 20 பேர் ஜாமீன் பெற்றுள்ளனர்.

இதற்கு நேரெதிராக கோத்ரா இரயில் எரிப்பு சம்பவத்தில் கைது செய்யப்பட்ட முஸ்லிம்கள் 81 பேரும் 'பொடா' சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் சேர்க்கப்பட்ட 70 சாட்சிகளில் ஒருசில இரயில்வே ஊழியர்கள் தவிர மற்றவர்கள் போலீசாரும், விசுவ இந்து பரிசத்தின் உறுப்பினர்களும்தான்.

குஜராத் மாநிலத்தில் அரசு இயந்திரம் முழுவதும் தொடக்கத்திலிருந்தே சிறுபான்மை முசுலீம்களுக்கு எதிரானதாகவே செயல்பட்டு வந்துள்ளது.

இனப்படுகொலை நடந்த நாட்களில் மாநிலம் முழுவதும் போலீசு இந்து மதவெறியர்களுக்கு எதிரான வழக்குகளைப் பதிவு செய்யவே மறுத்துவிட்டது. முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்த வழக்குகளில் பாதிக்கப்பட்டவர் சொன்ன முழு விவிரங்களை எழுதாமலும், குற்றவாளிகள் சாட்சிகளின் பெயர்களை விருப்பம் போலவும் பதிவு செய்துக் கொண்டது. தனித்தனியான பல வழக்குகளையும் ஒன்றாகச் சேர்த்து கும்பல் வன்முறையாகக் காட்டி ஒரே வழக்காகப் பதிவு செய்தது. பதிவு செய்யப்பட்ட 4252 வழக்குகளில், போதிய சாட்சிகளில்லை என்று கூறி சரிபாதி வழக்குகளை போலீசே கைகழுவி விட்டது.

பெஸ்ட் பேக்கரி வழக்கில் அரசு தரப்பு வழக்குரைஞரான ரகுவீர் பாண்டியா, பரோடா நகராட்சித்



**இந்து மதவெறியர்களின் படுகொலைக்கும், இந்திய நீதித்துறையின் 'நீதி' படுகொலைக்கும் சாட்சியான ஜஹிரா ஷேக்.**

தேர்தலில் பா.ஜ.க. ஆதரவுடன் போட்டியிட்டவர். சர்தார்புரா வழக்கில் அரசு வழக்குரைஞராக நியமிக்கப்பட்டுள்ளவர் வி.இ.ப.வின் பொது செயலாளரான திலீப் திரிவேதி. அகமதாபாத் நீதிமன்றத்திலுள்ள ஒன்பது அரசு வழக்குரைஞர்களுடன் சங்பரிவார் அமைப்புகளில் துடிப்புடன் செயல்படுபவர்கள்.

பெஸ்ட் பேக்கரி வழக்கின் தீர்ப்பை ''நீதியின் குறைப்பிரசவம்'' என்று வர்ணித்திருந்தார் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியும், தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவருமான எஸ்.ஏ. ஆனந்த். பரோடா நீதிமன்றத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

போலீசும், நீதித்துறையும் முழுவதுமாக இந்து மதவெறியர்களாலும், இந்து மதவெறி அமைப்புகளின் ஆதரவாளர்களாலும் நிரப்பப்பட்டு விட்டதையே இவை காட்டுகின்றன. இந்நிலையில் 'நேர்மையான விசாரணை' எப்படி நடக்க முடியும்? ஒரு வேளை ஜஹிரா ஷேக் போன்றவர்கள் துணிந்து உண்மையைக் கூறினாலும் 'நீதி' கிடைத்துவிடுமா?

ஜஹிரா, ஃபாகிர் முகமது இவர்களின் நீதிமன்ற அனுபவம், இனி குஜராத்தில் நடக்கவிருக்கும் அனைத்து வழக்குகளின் போக்கையும் காட்டுவதாக அமைந்துள்ளது. வேறு வார்த்தைகளில் சொன்னால், குஜராத் இனப்படுகொலை மீதான எல்லா வழக்குகளிலும் தீர்ப்பு எழுதப்பட்டு விட்டது. இனி அதை நீதிமன்ற மேடையில் அரங்கேற்றுவதுதான் மிச்சமுள்ளது.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய ஜஹிரா பெஸ்ட் பேக்கரி வழக்கை மீண்டும் நடத்த வேண்டுமென்றும், குஜராத்துக்கு வெளியே அவ்வழக்கு நடத்தப்பட்டால்தான் சாட்சிகளால் உண்மையைப் பேச முடியுமென்றும் கூறியிருக்கிறார்.

இந்திய அரசியல் சாசனமும், குற்றவியல் நடைமுறைச் சட்டமும், ஒரு முறை வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டவரை திரும்பவும் அதே வழக்கில் விசாரணை செய்வதை அனுமதிப்பதில்லை என்கின்றனர் சட்டவியல் நிபுணர்கள். அதற்குமேல் மறு விசாரணைக்கு உத்திரவிடப்படுமானால் இதற்குமுன் ''இந்துகள்'' பாதிக்கப்பட்ட வழக்குகளையும் மறு விசாரணை செய்ய வேண்டுமென்று இந்து மதவெறி அமைப்புகள் இப்போதே கோரிக்கை வைத்துள்ளன.

பெஸ்ட் பேக்கரி வழக்கைப் போல் 2000-க்கும் மேலான வழக்குகளையும் குஜராத்துக்கு வெளியே விசாரணை செய்ய முடியுமா என்பது ஒருபுறமிருக்க, மோடி இராஜ்ஜியத்தில் குஜராத்துக்குள் 'நீதி' கிடைக்காது என்பது மட்டும் பகிரங்கமாக அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது

ஜெர்மனியில் ஹிட்லரின் நாஜிப் படைகள் நடத்திய இனப்படுகொலையை விசாரித்த நூரம்பர்க் விசாரணை மன்றத்தைப் போல் குஜராத் இனப்படுகொலையை விசாரிக்கும் வழக்குமன்றம் அமைக்கப்பட வேண்டும். அதில் நீதிபதிகள் மட்டுமின்றி, மனித உரிமை ஆர்வலர்களும் பங்கேற்கும் பகிரங்க விசாரணை நடத்தப்பட வேண்டும். சாட்சிகளுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

அதற்கு, இந்து மதவெறியர்களை எதிர்த்துப் போராட துணியும், மனித உரிமை ஆர்வலர்களும், ஜனநாயகச் சக்திகளும் சட்ட வரம்புகளைத் தாண்டி செல்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆயுதமேந்திய மக்கள் படையும், தற்காப்பு குழுக்களும் கட்டியமைத்துக் கொள்ளாமல் ஒருபோதும் 'நீதி'யை முழுவதுமாய் உயிரோடு பிரசவித்து விட முடியாது.

● கவி


படிப்பகம்

www.padippakam.com

# விதை நெல்லுக்கும் வந்தது ஆபத்து!



வறட்சியும் வறுமையும் சூழ்ந்துள்ள, பின்தங்கிய சட்டீஸ்கார் மாநில விவசாயிகள் இன்று போர்க்கோலம் பூண்டு நிற்கிறார்கள். இப்போராட்டத்தை ஒடுக்கி, ஆயிரக்கணக்கானோரை மாநில அரசு கைது செய்த போதிலும் கடந்த ஒன்பது மாதங்களாக இப்போராட்டம் ஓயவில்லை.

மத்தியப் பிரதேச மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனி மாநிலமாகியுள்ள சட்டிஸ்கார், இந்தியாவின் பாரம்பரிய நெற்களஞ்சியங்களில் ஒன்றாகும். பிரபலமான ''இண்டிகா'' ரக அரிசியின் தாய் மண்ணாகும். ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்பு வரை இப்பிராந்தியத்தில் பலவகைப்பட்ட நெல் ரகங்கள் பயிரிடப்பட்டு வந்தன.

மணம் வீசும் அரிசி, சன்ன ரக அரிசி, மோட்டா ரக அரிசி, 60 நாட்களில் அறுவடையாகும் அரிசி, 150 நாட்களில் அறுவடையாகும் அரிசி, வறட்சியைத் தாங்கும் நெற்பயிர், மழைக்காலத்தில் 10 அடி தண்ணீர் தேங்கினாலும் கூட வளர்ந்து மகசூல் தரக்கூடிய நெற்பயிர், வைட்டமின் - ஏ சத்து நிறைந்த அரிசி, புரதச் சத்து நிறைந்த அரிசி, மருத்துவக் குணங்களைக் கொண்ட அரிசி எனப் பல்லாயிரம் வகைப்பட்ட அரிசி ரகங்களை விவசாயிகள் பயிரிட்டு வந்துள்ளனர். மிகச்சிறிய (4 மி.மீ) அரிசி முதல் நீளமான (14 மி.மீ) அரிசி வரை, ஏன் ஒரு நெல்மணி ஓட்டுக்குள் இரண்டு அரிசிகள் உள்ள அதிசய ரகங்கள் வரை, பலதரப்பட்ட அரிசி ரகங்களை விவசாயிகள் தமது பாரம்பரிய தொழில்நுட்பத்துடன் உருவாக்கி பயிரிட்டு வந்துள்ளனர். மண் வளம், தட்பவெப்ப நிலை மற்றும் பிற இயற்கைச் சூழலுக்கு ஏற்பவும் மக்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்பவும் தமது பாரம்பரிய அனுபவம் - தொழில்நுட்பத்தைக் கொண்டு சட்டிஸ்கார் விவசாயிகள் இத்தகைய அரிய வகை நெல் ரகங்களை உருவாக்கி சாகுபடி செய்துள்ளனர்.

ஆனால், இன்று இந்த அரிய வகை அரிசி ரகங்கள் எவையும் சட்டிஸ்காரில் பயிரிடப்படுவதில்லை. அவற்றின் விதை நெல்லும் இன்று விவசாயிகளிடம் இல்லை. ஒரு காலத்தில் நெற்களஞ்சியமாக விளங்கிய சட்டிஸ்காரில் இன்று மிகக் குறைவான அளவுக்கே நெல் பயிரிடப்படுகிறது. அதன் விளைச்சலும் மிகக் குறைவாகவே உள்ளது.

இதற்குக் காரணம், 1960-களில் கொண்டு வரப்பட்ட பசுமைப் புரட்சி. பாரம்பரிய விவசாயத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டு, ஏகாதிபத்தியங்களால் திணிக்கப்பட்ட பசுமைப் புரட்சி திட்டத்தின் கீழ் வீரிய ரக நெல் ரகங்கள் பயிரிடப்பட்டன. மகசூல் அதிகரித்தது; உரம், பூச்சி மருந்துகள் என இடுபொருள் செலவும் அதிகரித்தது. மீண்டும் புதிய ரகங்கள் வந்தன; புழு, பூச்சிகளும் பெருகின; வரைமுறையின்றி உரம் - பூச்சி மருந்துகள் கொட்டப்பட்டு விவசாய நிலங்கள் நாசமாகின. படிப்படியாக உற்பத்தியும் குறைந்தது.

இந்நிலையில், 1970-களில் மத்திய அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனரான டாக்டர் ரிச்சாரியாவும் அவரது குழுவினரும் பெருமுயற்சி செய்து சட்டிஸ்கார் பிராந்தியத்தின் முந்தைய அரியவகை அரிசி ரகங்களின் விதை நெல்லைச் சேகரித்தனர். அவை ராய்ப்பூர் அருகே அரசு விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் பயிரிட்டு, அவற்றின் தரம் விஞ்ஞான ரீதியாக உறுதி செய்யப்பட்டு உரிய ஆவணங்களுடன் விதை நெல் சேமிக்கப்பட்டன. 22,972 வகையான அரிசி ரகங்களின் விதை நெல்லைக் கொண்டுள்ள, ''ராய்ப்பூர் அரியவகை அரிசித் திரட்டு'' என்றழைக்கப்படும் இவ்விதைக் கருவூலம், ராய்ப்பூர் இந்திராகாந்தி விவசாயப் பல்கலைக் கழகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அரியவகை அரிசி ரகங்களின் மரபணுக்களைச் சேமித்துள்ள இக்கருவூலமானது, உலகில் இரண்டாவது பெரிய சேமிப்புத் திரட்டாகும்.

டாக்டர் ரிச்சாரியா இந்த விதை நெல்லின் மரபணுக்களைப் படியெடுத்து விரிந்த அளவில் பயிரிடவும் விதை நெல்லைச் சேமிக்கவும் விரிவாக்கவும் விவசாயிகளுக்குக் கற்றுத்தரக் கோரினார். ஆனால் மத்திய - மாநில அரசுகள் இக்கோரிக்கையைக் கிடப்பில் போட்டு விட்டன. அதே சமயம், இன்று இம்மரபணுக் கருவூலத்தையே கைப்பற்றிக் கொண்டு கொழுத்த அறுவடை செய்ய பன்னாட்டு ஏகபோக விதைக் கம்பெனிகள் கிளம்பி விட்டன.

சுவிட்சர்லாந்தைத் தலைமையகமாகக் கொண்ட ''சைன்ஜெண்டா'' எனும் பன்னாட்டு ஏகபோக விதைக் கம்பெனி, ''நோவார்டிஸ்'' என்ற பூச்சி மருந்து நிறுவனத்தின் கிளை நிறுவனமாகும்.

கடந்த ஆண்டு அக்டோபரில் சைன்ஜெண்டா நிறுவனத்தின் பிரதிநிதிகள் ராய்ப்பூரிலுள்ள இந்திரா காந்தி விவசாயப் பல்கலைக்கழக நிர்வாகிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி, ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடிவு செய்தனர். இவ்வொப்பந்தப்படி, இப்பல்கலைக் கழகத்தில் சேமிக்கப்பட்டுள்ள அரியவகை அரிசி ரகங்களின் மரபணுக்களைக் கொண்டு, வறட்சியைத் தாங்கி நிற்கும் வீரிய ஒட்டுரக அரிசிக்கான விதைநெல் உருவாக்கப்படும்; அதை சைன்ஜெண்டா நிறுவனம் இந்தியாவில் அறிமுகப்படுத்தி விற்பனை செய்யும்; பல்கலைக்கழகத்துக்குக் குறிப்பிட்ட அளவு ஈட்டுத்


படிப்பகம

www.padippakam.com

# காப்புரிமை மோசடியும் காத்திருக்கும் அபாயமும்

அமெரிக்காவின் ஏகபோக விதைக் கம்பெனியான ''மான்சாண்டோ'' அண்மையில் ஐரோப்பிய காப்புரிமை அலுவலகத்தில் ஒரு புதிய ரக கோதுமைக்குக் காப்புரிமை பெற்றுள்ளது. (எண்: EP445929). மான்சாண்டோவின் இப்புதிய ரக கோதுமையின் பெயர் ''கலாஹட்-7''.

இது மரபணு மாற்றம் செய்யப்பட்ட புதிய கண்டுபிடிப்பு அல்ல. இந்தியாவின் பிரபலமான ''நாப்ஹால்'' ரக கோதுமையுடன் மற்றொரு புல்வகையையும் ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்டதுதான் இந்த கலாஹட் - 7 ரக கோதுமை. இந்திய நாப்ஹால் கோதுமையின் மரபணுவைக் காட்டியே தனது புதிய ரக கோதுமைக்கு மான்சாண்டோ காப்புரிமை பெற்று மோசடி செய்துள்ளது. தனது கலாஹட்-7 ரக கோதுமையின் விதையையும் இந்தியாவில் விற்க முயற்சிக்கிறது.



கலாஹட்-7 என்ற புதிய ரக கோதுமைக்கான காப்புரிமை, கோதுமைப் பயிர் - விதைகளுக்கு மட்டுமின்றி, இக்கோதுமையிலிருந்து தயாரிக்கப்படும் ரவை, கோதுமை மாவு, ரொட்டி மாவுகளுக்கும் தரப்பட்டுள்ளது.

அதாவது, கலாஹட்-7 ரக கோதுமையைப் பயிரிடும் விவசாயிகள் மான்சாண்டோவுக்குக் கப்பம் கட்டினால் மட்டும் போதாது. இக் கோதுமையின் மாவைக் கொண்டு தயாரிக்கப்படும் ரொட்டி, கேக், பிஸ்கட் தயாரிக்கும் பேக்கரி உரிமையாளர்களும் மான்சாண்டோவுக்குக் கப்பம் கட்ட வேண்டும். இல்லையேல் காப்புரிமைச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

சுருக்கமாகச் சொன்னால், மான்சாண்டோ நமது காலைச் சுற்றியிருக்கும் நச்சுப் பாம்பு; அதை விரட்டியடிக்காமல் நமக்கு வாழ்வு இல்லை.

தொகை தரப்படும்.

இத்துரோக ஒப்பந்தம் பற்றிய தகவல்கள் மெதுவாகக் கசியத் தொடங்கியதும், இதை எதிர்த்து ராய்ப்பூரில் விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தி, இந்த ரகசிய ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரினர். மாநில முதல்வர், ஆளுநரிடம் ஊர்வலமாகச் சென்று மனு கொடுத்தனர். ஆனாலும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விவசாயப் பல்கலைக்கழக துணைவேந்தரான வி.கே. பட்டீல், ''உலகமய சகாப்தத்தில் இத்தகைய கூட்டுகள் மிக அவசியமாக உள்ளன. வேறெந்த நிறுவனமாவது இதைவிட அதிகமாகத் தொகை கொடுத்தால் நாங்கள் அவர்களுடன் பேரம் நடத்தத் தயாராக உள்ளோம்'' என்று தனது துரோகத்தனத்தை நியாயப்படுத்தினார். துணைவேந்தரின் திமிரை எதிர்த்து விவசாயிகள், விவசாயப் பல்கலைக் கழகத்தை முற்றுகையிட்டனர். பின்னர் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் (ICAR) தலையிட்டு, இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதை நிறுத்தி வைத்துள்ளதாக கடந்த ஆண்டு டிசம்பரில் அறிவித்தது. விவசாயிகளின் போராட்டத்தால், ராய்ப்பூர் அரிசி மரபணுக் கருவூலம் சைன்ஜெண்டாவிடம் பறிபோகாமல் தற்காலிகமாகக் காப்பாற்றப்பட்டது.

இருப்பினும், ஆபத்து இன்னும் நீங்கிவிடவில்லை. உலக வர்த்தகக் கழகத்தின் (WTO) உணவு மற்றும் விவசாயத்துக்கான சர்வதேசப் பயிர் மரபணு மூலாதார ஒப்பந்தத்தின் கீழுள்ள 35 வகையான பயிர்களில் நெல்லும் அடங்கும். இவ்வொப்பந்தப்படி, எந்தவொரு நாடும் நிறுவனமும் மரபணு மூலாதாரங்களைப் பெறவும் பரிமாறிக் கொள்ளவும் மேம்படுத்தவும் விற்பனை செய்யவும் முடியும். உலக வர்த்தகக் கழகத்தில் உறுப்பு நாடாக உள்ள இந்தியா, இதை மீற முடியாது.

மேலும், உலக வர்த்தகக் கழகத்தின் அனைத்துலக விதை ஒப்பந்தத்தைக் கடந்த 2001 நவம்பரில், உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) அங்கீகரித்துள்ளது. இதன்படி, காப்புரிமை பெறப்பட்டுள்ள ஒரு விதையின் மரபணுவைக் கொண்டு, அம்மரபணு மாற்றம் செய்யப்பட்ட புதிய ரக விதைக்கும் காப்புரிமை வழங்கப்படும். இதன்மூலம் சைன்ஜெண்டா போன்ற ஏகபோக விதை நிறுவனங்கள், நமது முன்னோர்களான விவசாயிகள் பாரம்பரிய தொழில்நுட்பத்துடன் உருவாக்கிய அரியவகை அரிசி ரகங்களின் மரபணுக்களைக் களவாடி, அதைக் கொண்டு மரபணு மாற்றம் செய்யப்பட்ட புதிய ரக அரிசியை உருவாக்கினால், அதற்கும் காப்புரிமை வழங்கப்படும். அதன்பிறகு அந்த அரிசியின் விதை நெல்லை சைன்ஜெண்டாவிடம் மட்டுமே வாங்கவேண்டும். இந்த விதை நெல் மறுமுளைப்புத் திறனற்ற மலட்டு விதைகளாகவே இருக்கும். எனவே, ஒரு பருவத்தில் பயிரிட்டு விதைநெல்லைச் சேகரித்து அதை அடுத்த பருவத்தில் விதைக்க முடியாது. மீண்டும் விதை நெல்லுக்கு சைன்ஜெண்டாவிடம் தான் கையேந்த வேண்டும்.

சட்டிஸ்கார் அரியவகை அரிசி மரபணுக் கருவூலத்தைக் கைப்பற்றுவதிலிருந்து சைன்ஜெண்டா நிறுவனம் தற்காலிகமாகப் பின்வாங்கியிருந்தாலும், பல இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து விதைகளை - மரபணுக்களை விலைக்கு வாங்க பேரம் நடத்தி வருகிறது. பூனாவிலுள்ள வசந்த்தாதா சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம், உ.பி.யிலுள்ள ஜி.பி. பந்த் விவசாய தொழில் நுட்பக் கழகம், மகாராஷ்டிராவின் கொங்கன் விவசாயக் கழகம் ஆகியவற்றுடன் சைன்ஜெண்டா, கூட்டு ஒப்பந்தங்களைப் போட்டுள்ளது. இவற்றின் மூலம் பயிர்களின் விதைகளையும் மரபணுக்களையும் களவாடிச் செல்லத் துடிக்கிறது.

நேற்று மான்சாண்டோவின் பருத்தி; இன்று சைன்ஜெண்டாவின் நெல் என்று விவசாயத்தையும் விவசாயிகளையும் நாசமாக்கி நாட்டை அடிமைப்படுத்தக் கிளம்பியுள்ள ஏகாதிபத்திய வல்லரசுகளின் மறுகாலனியாதிக்கச் சதியின் ஓர் அங்கம்தான் இத்தாக்குதல்கள். இதை நன்குணர்ந்துள்ள சட்டீஸ்கார் விவசாயிகள், ''அரியவகை அரிசி ரகங்களின் மரபணுக் கருவூலத்தை அன்னிய விதைக் கம்பெனிகளுக்கு விற்காதே! பாதுகாக்கப்பட்டுள்ள மரபணுக் கருவூலம், விவசாயிகளின் பாரம்பரிய சொத்து; அதை விவசாயிகளின் உடமையாக்கு!'' என்ற கோரிக்கையுடன் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

சட்டிஸ்கார் விதை சத்தியாகிரகம் என்ற பெயரில் விவசாயிகள் நடத்தி வரும் இப்போராட்டத்தை நாடெங்கும் விரிவுபடுத்தி மாபெரும் சுதந்திரப் போராட்டமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். விவசாயிகளும் உழைக்கும் மக்களும் ஒன்றிணைந்து மறுகாலனியாதிக்க எதிர்ப் போரில் பெரும்படையாய்த் திரண்டெழ வேண்டும். அதற்கு, பன்னாட்டு கம்பெனிகளுக்குப் பாதச் சேவை செய்துவரும் ஆளும் பா.ஜ.க. கும்பலையும் ஒட்டுக்கட்சித் துரோகிகளையும் முறியடிப்பதே முதற்தேவையாகும்.

● குமார்


படிப்பகம்

www.padippakam.com

# வறட்சி - விவசாயிகளுக்கு நிவாரணம் - யாருக்கு?

மஹ்பூப் நகர் - ஆந்திர மாநிலத்தின் தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த சிறிய நகரம். பத்து வருடங்களுக்கு முன்பு, மஹ்பூப் நகரில் இருந்து மும்பய் நகருக்கு ஒரேயொரு பேருந்து, அதுவும் வாரம் ஒருமுறைதான் சென்று வந்து கொண்டிருந்தது. ஆனால், இப்பொழுது அப்படியில்லை, நிலைமை ரொம்பவும் முன்னேறி விட்டது. மஹ்பூப் நகரில் இருந்து மும்பய்க்கு இப்பொழு ஒவ்வொரு வாரமும் 35 பேருந்துகள் சென்று வந்து கொண்டிருக்கின்றன.

மஹ்பூப் நகரில் இருந்து மும்பய்க்கு கிளம்பும் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகமானதை, சேவைப் பொருளாதாரத்தின் வளர்ச்சி எனக் குறிப்பிடுவதற்குப் பொருளாதார வல்லுநர்கள் தயக்கம் காட்ட மாட்டார்கள். இந்த மாற்றத்தை அவர்கள் கூறுவது போல எடுத்துக் கொண்டால், இந்த 'வளர்ச்சி'யின் பின்னே இருப்பது அந்தப் பகுதி விவசாயிகளின் துயரக் கதை.

இந்த ஆண்டின், இந்தக் கோடைப் பருவத்தில் மட்டும், மஹ்பூப் நகர் மாவட்டத்தின் மொத்த மக்கட் தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினர் வேலை தேடி வெளி மாநிலங்களுக்குச் சென்று விட்டனர். இப்படி வேலை தேடி வெளியேறும் இவர்கள் அனைவரும் சிறிய / ஏழை விவசாயிகள்; மற்றும் நிலமற்ற கூலி விவசாயிகள் இவ்விவசாயிகளுள் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடி சாதியைச் சேர்ந்தவர்கள்.

இந்தப் ''பொருளாதார அகதிகள்'' வேலை தேடி தஞ்சமடையும் இடம் மும்பய் நகரம். அதனால்தான், மும்பய்க்கு வாரம் ஒரு பேருந்து ஓடிய மஹ்பூப் நகரில், இன்று தினமும் ஐந்து பேருந்துகள் கிளம்புகின்றன. ''ஹை-டெக்'' முதல்வர் ஆளும் மாநிலத்தில், விவசாயிகள் இப்படி வேலை தேடி ஓட வேண்டிய காரணம் என்னவென்று கேட்டால், ''வறட்சி'' என இயற்கையின் மீது பழியைப் போடுகிறார், அம்மாவட்ட ஆட்சியாளர்.

வானம் பார்த்த பூமியான தெலுங்கானா பகுதியின் மஹ்பூப் நகர், அனந்தபூர் மாவட்டங்களைச் சேர்ந்த ஏழை விவசாயிகள், வேலை தேடி வெளியேறிச் செல்வது ஒன்றும் புதிய விசயமில்லை. ஆனால், இந்த வெளியேற்றம் இந்த ஆண்டைப் போல என்றும் இருந்ததில்லை. மஹ்பூப் நகர் மாவட்டத்தில் இருந்து மட்டும் 6 முதல் 10 இலட்சம் ஏழை / கூலி விவசாயிகள், தங்களின் குடும்பத்தோடு வேலை தேடி மும்பய்க்கும், தமிழ்நாடு, குஜராத் ஆகிய பிற மாநிலங்களுக்கும் சென்று விட்டனர்.

ஆனந்தபூர் மாவட்டத்தில் மட்டும், இந்தக் கோடையின் பொழுது 1.6 இலட்சம் கால்நடைகள், அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டுள்ளன. ஏனென்றால், ஏழை விவசாயிகளுக்கு ''வைக்கோல்'' வாங்குவது என்பது இன்று தங்கம் வாங்குவது போலாகி விட்டது. மாட்டுக்கு வைக்கோல் வாங்கக் கூட வழியில்லாமல் போன விவசாயிகளால், அரிசிச் சோற்றை நினைத்துப் பார்க்க முடியுமா? அனந்தபூர், மஹ்பூப் நகர் மாவட்ட ஏழை விவசாயிகளைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றுவது, அவ்விரு மாவட்டங்களிலும் பல்வேறு தொண்டு நிறுவனங்களால் திறக்கப்பட்டுள்ள கஞ்சித் தொட்டிகள் தான்.

பஞ்சம் பிழைக்க மும்பய் நகருக்குப் போகும் மஹ்பூப் நகர் மாவட்ட விவசாயிகள்.



மஹ்பூப் நகர், ஆந்திராவின் தலைநகர் ஹைதராபாத்தில் இருந்து 100 கி.மீ தொலைவில்தான் உள்ளது. கணினி - இணையதள யுகத்தில் 100 கி.மீ. தொலைவு என்பது சொடுக்குப் போடும் நேரம்தான். எனினும், ஆந்திராவின் உணவு அமைச்சர், ''இந்தக் காலத்தில் யார் கஞ்சி குடிப்பார்கள்?'' என ஒன்றுமே தெரியாததுபோல, திமிரோடு கேட்கிறார். மஹ்பூப் நகர் மாவட்ட ஆட்சியாளர், ''இம்மாவட்டத்தில் ஏராளமான வறட்சி நிவாரணப் பணிகள் நடந்து வருகின்றன; யார் வந்து வேலை கேட்டாலும், உடனே வேலை கிடைக்கும் எனக் கூறி, அம்மாவட்ட மக்கள் வேலை தேடி வெளியேறிச் செல்வதை ஒதுக்கித் தள்ளுகிறார்.

மாவட்ட ஆட்சியாளர் மதுசூதன ராவ் பொய் சொல்லவில்லை. அனந்தபூர், மஹ்பூப் நகர் மாவட்டங்களில், வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் பல கோடி ரூபாய் பெறுமான வறட்சி நிவாரணப் பணிகள் நடந்து வருகின்றன. மஹ்பூப் நகர் மாவட்டத்தில் ஜூரலா கால்வாய்ப் பணியும் நடந்து வருகிறது. அனந்தபூர் மாவட்டத்தில், பசு மாடுகளைக் காப்பாற்ற அரசால் ''கோ சாலைகள்'' திறக்கப்பட்டுள்ளன. இப்படி அடுக்கடுக்காக நிவாரணப் பணிகள் நடக்கும் பொழுது, ஏழை விவசாயிகள் வேலை தேடி மும்பய்க்கு ஓட வேண்டிய அவசியமும், கஞ்சித் தொட்டியின் முன் தட்டைத் தூக்கிக் கொண்டு நிற்க வேண்டிய அவலமும் ஏற்பட்டிருப்பது ஏன்? என்பதுதான் கேள்வி.

''நாங்கள் மும்பயில் பல அடுக்கு மாடிக் கட்டிடங்களைக் கட்டியிருக்கிறோம்; ஆனால், உள்ளூரில் நடக்கும் வேலைகளுக்கு, காண்டிராக்டர்கள் எங்களைக் கூப்பிட மாட்டார்கள்'' என்கிறார், மஹ்பூப் நகர் மாவட்டத்தில் உள்ள கோண்டபூர் கிராமத்தைச் சேர்ந்த சைலு என்ற விவசாயி. உள்ளூரைச் சேர்ந்த விவசாயிகளை, அடிமாட்டுக் கூலிக்குக் கொத்தடிமைகளைப் போல நடத்த முடியாது என்பதுதான், இதன் இரகசியம்.

மஹ்பூப் நகர் மாவட்டத்தில் நடந்து வரும் ஜூரலா கால்வாய்ப் பணித் திட்டத்தில் வேலை செய்பவர்க


படிப்பகம்

www.padippakam.com

ளுக்கு, ஆந்திர அரசு நிர்ணயித்துள்ள ஒருநாள் கூலி 83 ரூபாய். ஆனால், ஒப்பந்தக்காரர்கள் கொடுப்பதோ 45 ரூபாய். இதை முணுமுணுக்காமல் வாங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே, ஒப்பந்தக்காரர்கள் பீகாரில் இருந்தும், ஒரிசாவில் இருந்தும் கூலி யாட்களைப் பிடித்து வருகிறார்கள்.

''வெளி ஆட்களுக்கு உள்ளூர் மொழி தெரியாது; அவர்கள் மிகவும் பணிவாக நடந்து கொள்வார்கள்'' என்கிறார் சந்திரசேகர் ரெட்டி என்ற ஒப்பந்தக்காரர். மஹ்புப் நகரில் நடக்கும் வேலைகளுக்கு பீகார் கூலிகளைக் கொண்டு வரும் ஒப்பந்தக்காரர்கள், ஆந்திராவுக்கு வெளியே நடக்கும் வேலைகளுக்கு மஹ்புப் நகரைச் சேர்ந்த கூலிகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்குவது கிடையாது. இந்த ஒப்பந்தக்காரர்கள் பழைய கொத்தடிமை முறையை, புதிய வடிவம், உத்திகளுடன் கடைபிடிப்பதாகக் குறிப்பிடுகிறார், சாய்நாத் என்ற பத்திரிகையாளர்.

வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளில் வேலை செய்யும் கூலியாட்களுக்கு, 65 முதல் 75 சதவீதக் கூலியை அரிசியாகத் தர வேண்டும் என்பது அரசாங்கத்தின் விதி. ஆனால், நடைமுறையில் இந்தத் திட்டம், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயக் கூலிகளின் பசியைப் போக்காமல், ஒப்பந்தக்காரர்கள் - அரிசி வியாபாரிகள் - அதிகாரிகள் என்ற கொள்ளைக் கும்பலின் தொப்பைக்குள் போய் விடுகிறது.

வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் ஆந்திராவில் நடந்து வரும் பணிகளை ஆய்வு செய்த இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த நிறுவனமொன்று, ''ஒப்பந்தக்காரர்கள் இந்திய உணவுக் கழகத்திடமிருந்து ஒரு கிலோ அரிசியை ரூ. 5.65-க்கு வாங்கி, அதை மண்டி வியாபாரிகளுக்கோ, அரிசி ஆலைகளுக்கோ ரூ. 7.50-க்கு விற்பதாகவும், அதன் பின்னர் மண்டி வியாபாரிகள் அந்த அரிசியை ரூ. 9.50-க்கு மீண்டும் இந்திய உணவுக் கழகத்திடமே விற்று விடுவதாகவும்'' ஆதாரங்களோடு அம்பலப்படுத்தி இருக்கிறது.

தமிழ்நாட்டில் முதுகுளத்தூர் யூனியனில் வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய அரிசியை, ஒப்பந்தக்காரர்கள் வெளிச் சந்தையில் கிலோ பத்து ரூபாய்க்கு விற்றுக் கொள்ளையடித்ததை ''நக்கீரன்'' இதழ் (14.02.03) அம்பலப்படுத்தியுள்ளது.

இந்த அரிசிக் கொள்ளையை நடத்துவதற்கு வசதியாக, வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளில் விவசாயக் கூலிகளைப் பயன்படுத்தாமல், மண் வாரி இயந்திரங்களைப் பயன்படுத்தி, வேலையை முடித்து விடுகிறார்கள். ''எங்களுக்கு வேலை கொடுக்கிற எம்.எல்.ஏ. அல்லது சேர்மனுக்கு 10% கமிசன் கொடுக்கணும்; பில் பாஸ் ஆகணும்னா இ.இ.க்கு 4%, பி.டி.ஓ.க்கு 3%, இன்ஜினியருக்கு 1%, பில் எழுதுறவருக்கு 1% கமிசன் கொடுக்கணும். இந்த கமிசனெல்லாம் போக எங்களுக்கும் லாபம் கிடைக்கணும்னா மிஷினை வச்சிதான் வேலை செய்யணும்'' என வறட்சி நிவாரணத்தின் இலட்சணத்தைப் போட்டு உடைக்கிறார், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு ஒப்பந்தக்காரர்.



தாராளமயம் விவசாயத்தை ஒழித்துக் கட்டி விட்டதால், கஞ்சித் தொட்டி முன் நிற்கும் விவசாயிகள்.




வறட்சி நிவாரணத்தைக் கொள்ளையடித்துப் பங்கு போட்டுக் கொண்ட ஒப்பந்தக்காரர்களும், அதிகார வர்க்கமும் வாங்கிக் குவித்திருக்கும் கார்கள்.

வறட்சியைத் தவிர்க்க முடியாத இயற்கையின் சாபமாகவும், வறட்சி நிவாரணப் பணிகளில் நடைபெறும் முறைகேடுகளை வெறும் இலஞ்ச - ஊழல் பிரச்சினையாகவும் சுருக்கிப் பார்க்க முடியாது. சொல்லப் போனால், வறட்சியும், வறட்சி நிவாரணப் பணிகளும் ஆளும் கும்பலுக்கும், அதிகார வர்க்கத்திற்கும் அவசியமாக இருக்கின்றன.

வறட்சி, மஹ்புப் நகர் விவசாயிகளை மும்பயை நோக்கிப் பந்தாடுகிறது. பஞ்சம் பிழைக்க மும்பய்க்குப் போகும் அந்த விவசாயிகளை,


படிப்பகம்

www.padippakam.com

மும்பயைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் அதிபர்களும், செங்கல் சூளை முதலாளி களும் தினக் கூலிகளாகப் பயன்படுத்திக் கொண்டு கொழுக்கிறார்கள். பீகா ரிலும், ஒரிசாவிலும் வறட் சியால் பாதிக்கப்பட்ட கூலி விவசாயிகளை, ஆந்தி ராவின் அரசு ஒப்பந்தக்கா ரர்கள் நவீனக் கொத்தடிமைக ளாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தமிழ் நாட்டின் தருமபுரியைச் சேர்ந்த ஏழை விவசாயிகள் பஞ்சம் பிழைக்க பெங்களூ ருக்கு ஓடுகிறார்கள். ரேசன் கடைகளில் ஏழைகளுக்கு ரூ. 5.25 என்ற விலையில் விற்கப்படும் அரிசியை, வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் ரூ. 8.00 என விற்று, அரசும் தன் பங்குக்கு இலாபம் அடிக்கிறது.



கரடு முரடாகக் காணப்படும் இந்த ராம் துர்கா - சிக்மந்தல் மண் சாலை, அரசாங்கப் பதிவேடுகளில் தார்சாலை: வறட்சி நிவாரணப் பணிகளின் இலட்சணம்.

வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ள ஆந்திராவின் அனந்தபூர் மாவட்டத்தில் மட்டும் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போன விவ சாயிகளின் எண்ணிக்கை 2,500-ஐத் தாண்டிவிட்டது. விவசாய குடும்பங் களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஏழை மாணவர்கள், கல்விக் கட்டணம் கட்ட முடியாமல் படிப்பைப் பாதியி லேயே நிறுத்தி விட்டார்கள். இப்படிப் பட்ட 'சாபக்கேடான' மாவட்டத்திற்கு இன்னொரு 'செழிப்பான' பக்கமும் உண்டு.

இம்மாவட்டத்தின் தலைநகரான அனந்தபூர் நகரில் மட்டும் 610 டாடா சுமோ, குளுகுளு வசதி கொண்ட 130 டாடா ஸ்பெசியோஸ், 85 குவாலிஸ், 30 மஹிந்திரா ஸ்கார்பியோ கார்கள் பதிவு செய்யப்பட்டு ஓடுகின்றன. அனந்தபூர் நகரின் மக்கட் தொகைக்கும், இங்கு பதிவு செய்யப் பட்டு ஓடும் கார்களின் எண்ணிக் கைக்கும் இடையே உள்ள விகிதத்தை எடுத்துக் கொண்டால், மற்ற பெரு நக ரங்களைவிட இங்கு கார்களின் எண்ணிக்கை அதிகம்.

கடந்த சில ஆண்டுகளாக அனந்த பூரைப் பிடித்திருக்கும் வறட்சிக்கும், அதேசமயம் ஒவ்வொரு ஆண்டும் கார்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதற்கும் இடையே உள்ள உறவை ஆய்வு செய்துள்ள ''ஈநாடு'' என்ற தெலுங்கு தினசரி, ''நவீனமான, சொகு சான காரில் வருபவர்கள் ஒப்பந்தக்கா ரர்கள்; மாருதி ஜென், டாடா இண்டிகா, சாண்ட்ரா காரை வாங்குபவர்கள் அதி கார வர்க்கத்தினர். தொண்டு நிறுவ னங்கள் பயன்படுத்துவது நவீனமான ஜீப்புகள்'' எனப் பட்டியல் இட்டுள் ளது.

அனந்தபூர் நகரில் புதுப் பணக்கா ரர்கள் குடியிருக்கும் நவீனமான குடியி ருப்புப் பகுதியொன்று உருவாகி வரு கிறது. உள்ளூர் பத்திரிகையாளர்கள் இக்குடியிருப்பை ''குட்வில் காலனி'' என அழைக்கிறார்கள். ஆங்கிலச் சொல்லான ''குட்வில்''லுக்கு கமிசன், இலஞ்சம் என்ற பொருளும் உண்டு. இந்தக் குடியிருப்பு விவகாரத்தில், விவசாயிகள், பத்திரிகையாளர்களைப் போல 'நாசூக்காக' நடந்து கொள்வ தில்லை. அவர்கள் அக்குடியிருப்பை ''வேலைக்கு உணவு வழங்காதத் திட்டக் காலனி'' எனப் பச்சையாகவே குறிப்பிடுகிறார்கள்.

வறட்சியை விவசாயிகள் வேண்டு மானால் வெறுக்கலாம்; ஆனால், ஒப்பந்தக்காரர்கள், அதிகாரிகள், கந்து வட்டிக்காரர்கள், முதலாளிகள் என்ற ஆளுங்கும்பல் வறட்சியைக் கும்பிட்டு விழுந்து வரவேற்கிறார்கள். வறட்சி அவர்களின் வளர்ச்சிக்கு மட்டும் பயன்படவில்லை; தாராள மயம், விவசாயத்தில் ஏற்படுத்தியுள்ள அத்துணை பாதிப்புகளையும் பூசி மெழுகி மூடி மறைத்துவிடவும் பயன் படுகிறது.

இந்தக் கோடையின்பொழுது, ஆந்திராவில் மட்டும் ஆயிரத்துக்கும் அதிகமான ஏழை விவசாயிகள் வெயிலில் சுருண்டு விழுந்து செத்துப் போனார்கள். இந்தச் சாவுகள் அனைத் திற்கும், ''வறட்சி'', ''அனல்காற்று'' என இயற்கையின் மீது பழியைப் போட்டது, ஆந்திர அரசு. மிகவும் பின் தங்கிய, தார் பாலைவனம் உள்ள இரா சஸ்தானில் கூட இத்துணை விவசா யிகள் அனல் காற்றால் சாகாத பொழுது, ஹை-டெக் மாநிலமான ஆந்திராவில் ஏன் இத்துணை அவல மான சாவுகள் என்ற கேள்வியை எழுப் பினால், ஆந்திர அரசு மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதைப் புரிந்து கொள்ள லாம்.

''ஒரு மூட்டை அம்மோனியாவின் விலை, 1991-இல் விற்றதைவிட, இப்பொழுது மூன்று மடங்கு அதிக மாகி விட்டது; விதை நெல்லின் விலை இரண்டு மடங்காகி விட்டது; மின் கட்டணம் பல மடங்கு உயர்ந்துவிட் டது; கந்துவட்டி கழுத்தை நெறிக்கிறது. இதனால் வறட்சியை மட்டும் குற்றவா ளியாக்க முடியாது'' என்கிறார், சந்தி ரய்யா என்ற விவசாயி. வறட்சியை வில்லனாகக் காட்டி, தாராளமயத்தின் தாக்குதல்களை மூடிமறைக்கும் ஆளுங்கும்பலின் மோசடிகளை அம்ப லப்படுத்துவதற்கு இதைவிட வேறு வார்த்தைகள் தேவையில்லை.

● ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com

# ஆதிசங்கரரின் மோசடி! மாணவர்கள் போராட்டம்!

திருச்சி நகர எல்லையில் செக்போஸ்ட் எனுமிடத்தில் ஆதிசங்கரர் பாலிடெக்னிக் என்ற தனியார் கல்லூரி உள்ளது. நகரத்துக்குள் கல்லூரி என்ற ஆசைகாட்டி மாணவர்களைச் சேர்த்த இக்கல்லூரி நிர்வாகம், இப்போது நடுக் காட்டில் கல்லூரியை மாற்றி விட்டது. திருச்சியை அடுத்துள்ள சமயபுரத்தைத் தாண்டி 8 கி.மீ. தொலைவில் பேருந்து வசதியே இல்லாத நடுக்காட்டில் கட்டிடம் கட்டி, இனி இங்குதான் கல்லூரி இயங்கும் என்று நிர்வாகம் அறிவித்துள்ளது. இதனால் காலை 9 மணிக்கு கல்லூரியில் வகுப்பு தொடங்குவதற்குள் மாணவர்கள் செல்ல முடிவதில்லை. திருச்சி - விழுப்புரம் நெடுஞ்சாலையிலிருந்து பேருந்து வசதி இல்லாததால் கல்லூரிக்கு மாணவர்கள் நெடுந்தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது. ஐந்து நிமிடம் தாமதமானாலும் ஒழுங்கு - கட்டுப்பாடு என்ற பெயரில், மாணவர்களிடம் கல்லூரி நிர்வாகம் அபராதக் கட்டணம் வசூலிக்கிறது; அல்லது வருகைப் பதிவேட்டில், கல்லூரிக்கு வரவில்லை என்று குறித்துக் கொண்டு அச்சுறுத்துகிறது.

முன்பு திருச்சி நகரில் இக்கல்லூரி இயங்கியபோது பேருந்துக்கு ரூ. 5 செலவு செய்த மாணவர்கள், இன்று நடுக்காட்டுக்குள் உள்ள கல்லூரிக்கு வர ரூ. 25 செலவு செய்ய வேண்டியுள்ளது. இது தவிர, மாணவர்களிடம் நன்கொடை என்ற பெயரில் பல ஆயிரங்கள் பிடுங்கப்படுகிறது. புத்தகங்களுக்காக ரூ. 2000 வாங்கிய நிர்வாகம், இன்றுவரை மாணவர்களுக்குப் புத்தகமே தரவில்லை. கணினி துறைக்கு ஆசிரியரே இல்லை. கல்லூரியில் குடிநீர் - கழிப்பறை வசதி இல்லை. பரிசோதனைக் கூடம், நூலகம், விளையாட்டு மைதானம், விடுதி முதலான எந்த



வொரு அடிப்படை வசதிகளுமின்றி, அரசாங்க ஆரம்பப் பள்ளிக்கூடத்தை விடக் கேவலமான நிலையில் இக்கல்லூரி உள்ளது. இவை குறித்து கல்லூரி நிர்வாகத்திடம் மாணவர்கள் பலமுறை முறையிட்ட போதிலும், நிர்வாகம் அசைந்து கொடுக்கவில்லை; மாறாக, கல்லூரியைவிட்டே நீக்கி விடுவோம் என்று மாணவர்களை மிரட்டத் தொடங்கியது.

குமுறிக் கொண்டிருந்த மாணவர்கள் கடந்த ஜூலை 8-ஆம் தேதியன்று திருச்சி - சென்னை நெடுஞ்சாலையில் சாலை மறியலில் இறங்கினர். தகவலறிந்து பாய்ந்து வந்த சிறீரங்கம் போலீசார், பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று நைச்சியம் செய்து மறியலைத் தடுத்தனர். பின்னர், பேச்சு வார்த்தை என்ற பெயரில் கல்லூரி நிர்வாகம் மாணவர்களை மிரட்டியது; மாணவர்கள் உறுதியாக நிற்கவே கெஞ்சிப் பார்த்தது. கோரிக்கைகள் நிறைவேறாதவரை போராட்டம் ஓயாது என்று மாணவர்கள் எச்சரித்ததால், நிர்வாகத்தின் இம்மோசடிப் பேச்சு வார்த்தை தோல்வியைத் தழுவியது.

மாணவர்களின் நியாயமான இப்போராட்டத்தை ஆதரித்த புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, இம்மாணவர்களை அமைப்பாக்கி அடுத்த கட்ட போராட்டத்தைத் தொடங்கியது. அன்றிரவே, ''ஆதிசங்கரரின் மோசடி பாரீர்!'' என்ற தலைப்பில் நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. பீதியடைந்த கல்லூரி நிர்வாகம், அவற்றைச் சுரண்டும் வேலையில் ஈடுபட்டு மேலும் அம்பலப்பட்டுப் போயுள்ளது. இதில் வெட்கக்கேடு என்னவென்றால், இக்கல்வியாண்டின் தொடக்கத்தில் காஞ்சி மட சீனியர் சங்கராச்சாரி, இம்மோசடிக் கல்லூரிக்கு வந்து ஆசி வழங்கியுள்ளார்!

ஆதிசங்கரர் பாலிடெக்னிக் நிர்வாகத்தின் மோசடிகளையும் அச்சுறுத்தல்களையும் இதர கல்லூரி மாணவர்களிடமும் மக்களிடமும் பிரச்சாரம் செய்து வரும் பு.மா.இ.மு. அடுத்த கட்ட போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகிறது.

*- புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, திருச்சி.*

# தோழர் கண்ணையனுக்கு சிவப்பஞ்சலி!

மணப்பாறை பகுதி ம.க.இ.க. தோழர் கண்ணையன் கடந்த ஜூன் 28 அன்று இரவு ஆஸ்துமா நோயின் பாதிப்பால் இயற்கை எய்தினார்.



இளம் பருவத்திலேயே ஒன்றுபட்ட கம்யூனிஸ்டு கட்சியில் தம்மை இணைத்துக் கொண்ட தோழர் கண்ணையன், தியாகேசர் பஞ்சாலையில் தொழிலாளியாக இருந்து கொண்டே கம்யூனிஸ்டு கட்சியின் தொழிற்சங்கத்தை நடத்தினார். இ.க.க.(மா). தனியாக பிரிந்தபோது அதில் தன்னை இணைத்துக் கொண்டார். பின்னர் அக்கட்சியினர் ஆலை முதலாளியுடன் போட்ட தொழிலாளர் விரோத ஒப்பந்தத்தை எதிர்த்து அக்கட்சியிலிருந்து வெளியேறி ''பாட்டாளி தொழிற்சங்கம்'' என்ற சங்கத்தை உருவாக்கி, பின்னர் அதனை ஏ.ஐ.டி.யு.சி.யுடன் இணைத்தார். மில் நிர்வாகத்துக்கு எதிராக தனது சொந்த செலவில் தொழிலாளர்களுக்கு ஆதரவாக வழக்கை நடத்தினார்.

1993-இல் ம.க.இ.க. தொடர்பு கிடைத்ததும், அதில் தன்னை இணைத்துக் கொண்டு மணப்பாறையில் கிளை கட்டுவதற்கு பெரும் முயற்சி செய்தார். சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின்போதும், குறிஞ்சி கலை கல்லூரி மாணவர்கள் 5 பேர் நீக்கப்பட்டதைக் கண்டித்தும், அவர்களை மீண்டும் கல்லூரியில் சேர்க்க வலியுறுத்தியும் தோழர் நடத்திய போராட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. தெருமுனைக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள் போன்ற ஏராளமான பிரச்சாரப் பணிகளைத் தலைமையேற்று நடத்தியுள்ள தோழர், தனது மனைவி மற்றும் குடும்பத்தினரையும் அரசியல் இயக்கங்களோடு முழுமையாக இணைத்துக் கொண்டு செயல்பட்டார். தமது மகளை அமைப்புத் தோழருக்கு புரட்சிகர மணம் செய்து வைத்தார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக தொடர்ந்து போராடிய போர்க்குணத்தையும், உறுதியையும் தோழரிடம் இருந்து நாம் கற்றுக் கொள்வோம். தோழர் கண்ணையனுக்கு எமது சிவப்பஞ்சலி!

*- மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி.*


படிப்பகம்

www.padippakam.com

# தொழிற்சங்க தரகர்களின் பிடியில் கோவை தொழிலாளர்கள்

**கோ**வை கணபதி - டெக்ஸ்டூல் தொழிற்சாலையை வாய்க்கரிசி போட்டு மூடும் பணியை பிழைப்பு வாத தொழிற்சங்கங்கள் தலைமை யேற்று முடித்துவிட்டன.

1948-ஆம் ஆண்டு 2 கோடி ரூபாய் மூலதனத்துடன் தொடங்கப் பட்ட இவ்வாலை 2000-ஆம் ஆண்டில் 300 கோடி ரூபாய் சொத்து மதிப்புள்ளதாக வளர்ந்தது. தற்போது அவ்விடம் ஆலை இருந்ததற்கான அறிகுறியே இல்லாமல் குட்டிச் சுவராக காட்சியளிக்கிறது.

இதற்கு முதலாளிகளும் அரசும் மட்டுமே காரணமல்ல; தொழிலாளர்க ளுக்கு தலைமையேற்ற துரோக தொழிற்சங்கங்களும் இதற்கு பொறுப் பேற்க வேண்டும்.

தங்கள் ரத்தமும் சதையுமாக இத்தொழிற்சாலையை தொழிலா ளர்கள் வளர்த்தனர். 1948-ஆம் ஆண்டு இவ்வாலை தொடங்கப்பட்ட போது, வெறும் தோசைக்கல் வார்ப்பு இரும்பு தயாரிப்பதில் தொடங்கி படிப் படியாக தையல் மிஷின், ஆயில் எஞ்சின் தயாரிப்பு என்று வளர்ந்தது. பிறகு, ஸ்பின்னிங் பிரேம், மெயின் டபுளிங் பிரேம் என்று உற்பத்தி வளர்ச்சிய டைந்து பெரிய பிளாண் டுகள் முதல் இராணுவத் தளவாடங்களுக்குத் தேவையான உதிரி பாகங்கள் தயாரிப்பது வரை 5000 தொழிலா ளர்கள் பணிபுரியும் இட மாக விரிவடைந்தது.

இதற்கிடையில் 1967-இல், லட்சுமி மில் குழுமத்திற்கு இவ்வாலை நிர்வாகம் கைமாறியது. தொழிலாளர்களின் போராட்டத்தைக் காரணம் காட்டி, நிர்வாகம் அதே ஆண்டில் தொழிற்சா லையை இழுத்து மூடியது. 3000 தொழிலாளர்கள் வேலையிலிருந்து வெளி யேற்றப்பட்டனர். தொழி லாளர்களின் தொடர்ச்சி யான போராட்டத்தின் மூலம், லட்சுமி குழும நிர்வாகம் 10 கோடி ரூபாய் கடன் பத்திரம் பெற்றுக் கொண்டு தமி ழக அரசிடம் நிர்வாகத்தை ஒப்படைத் தது. பிறகு, அரசு தலைமையில், தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள் பங்குடன் தொழிற்சாலை இயக்கப்பட் டது.

குறுகிய காலத்தில், இவ்வாலை 10 கோடி ரூபாய் கடனை அடைத்து, 22 கோடி ரூபாய் நிகரலாபம் ஈட்டியது. இக்காலத்தில் ஆலை பெரும் அளவில் வளர்ச்சியடைந்தது. தரம் வாய்ந்த உற்பத்தியால் வெளிநாடுகளிலி ருந்தும் ஆர்டர்கள் குவிந்தன. இதனு டைய திறனுடன் போட்டி போட முடி யாமல், லஷ்மி குழுமத்திற்கு சொந்த மான இன்னொரு நிறுவனமான 'லஷ்மி மிஷின் ஒர்க்ஸ்'க்கு பின்ன டைவு ஏற்பட்டது.

இதனால், மீண்டும் லஷ்மி குழுமம் அரசு துணையுடன் டெக்ஸ் டூல் நிர்வா கத்தைக் கைப்பற்றியது. பிறகு, டெக்ஸ்டூல் ஆலையின் ஆர்டர்கள், ரக சியமாக லஷ்மி மிஷின் ஒர்க்ஸ் ஆலைக்கு மாற்றப்பட்டது. பல இடங் களில் இருந்த ஆலையில் பல நூறு ஏக்கர் நிலங்கள் பினாமி பெயர்க ளுக்கு குறைந்த விலையில் மாற்றப்பட் டன. ஆலைக்கு நிரந்தர வருமானத்தை ஈட்டி தந்த மின்சாரம் தயாரிக்கும் காற்றாலைகள் விற்கப்பட்டன. இதனால், டெக்ஸ்டூல் நிறுவனம் நலிவ டையும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

மீண்டும், மீண்டும் ஆட்குறைப்பு, சம்பளம் வெட்டு, சலுகைகள் பறிப் புக்கு ஆளான தொழிலாளர்கள், பல நேரங்களில் துரோகத் தலைமையை மீறி போர்க்குணத்துடன் போராடினர். பல அடக்குமுறைகளையும், துரோக ஒப்பந்தங்களையும் ஏவிய நிர்வாகம், கடைசியாக 2000-ம் ஆண்டு ஜூன் மாதத்துடன் ஆலையின் உற்பத்தியை நிறுத்தியது.

அதற்காகவே காத்திருந்ததுபோல், துரோக தொழிற்சங்கங்கள் தரகு வேலையில் இறங்கின. நிர்வாகத்தின் சட்டவிரோத, ஜனநாயக விரோத ஒப்பந்தங்களை முன்னின்று தொழிலா ளர்கள் மீது திணித்தன. ''தொழிலாளர்கள் பயன் பெறும் திட்டம்'' மற்றும் ''தொழிலாளி தானே பணி யிலிருந்து வெளியேறும் திட்டம்'' என்று வேலை பறிப்பை சட்டபூர்வமாக் கினர். வெளியேற்றிய தொழிலாளர்களுக்கும் உரிய நட்ட ஈடு தராமல் அதற்கும் நிர்வாகத்துடன் ஒப்பந்தம் போட வேண்டும் என்ற நிலைக்கு தள்ளினர்.




இவ்வளவு துரோகத் திற்கு பிறகும் தைரியமாக, தங்களைத் தொழிலாளர் களின் தோழனாக மார்தட்டி திரிகின்றன துரோகத் தொழிற்சங்க தலைமைகள்.

'கொடிமென்' என்ற பெயரில் பிழைப்புவாத, கைக்கூலி தொழிற்சங் கத்தின் தலைவர் வக்கீல் புவனேஸ்வரன் 'தொழிலா


படிப்பகம்

www.padippakam.com

ளர்கள் விழிப்புணர்வு மாநாடு' நடத்து கிறார். டெக்ஸ் டூல் ஆலையின் பிர தான தொழிற்சங்கத்தின் தலைவராயி ருந்த புவனேஸ்வரன் அரசாங்கத்திடம் டெக்ஸ் டூலை மூடுவதற்கு எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று எழுதிக் கொடுத்தவர். கோவை வி.எஸ். பவுண் டரியில், நிர்வாகத் தரப்பு விசாரணை அதிகாரியாக இருந்து, 12 தொழிலா ளர்களை வேலைநீக்கம் செய்தவர். நிர்வாக தரப்பின் வக்கீலாகவும் இப்போது நீதிமன்றத்தில் வாதாடு பவர். ரேவதி சி.பி.லிமிடெட் நிறுவ னத்தில், மாதம் ரூபாய் 8,000 சம்பளம் வாங்கியவர்களை அதே கம்பெனியில் தினக் கூலிகளாக மாற்றியவர். வி.ஜே. என்ஜினியரிங், ரூட்ஸ்... இப்படி பல தொழிற்சாலைகளில் நிர்வாகத்தின் கையாளாக இருந்து தொழிலாளர் களை வீட்டுக்கு அனுப்பியவர்.

இவருக்குப் போட்டியாக, போலி கம்யூனிஸ்டுகளின் ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்கமோ, போலீசு பாணியில் தொழிலாளர்களை பயமுறுத்துகிறது. தனது சுற்றறிக்கை மூலம் அரசின் அடக்குமுறைச் சட்டங்களை காட்டி தோழமையுடன் பீதியூட்டுகிறது. ''தற்போது நடைமுறைக்கு வந்திருக் கக்கூடிய சட்டத்தின்படி அரசுத்துறை வங்கிகள் தங்களுக்கு வரவேண்டிய கடன் பாக்கிகளுக்காக கடன் தர வேண்டியவர் வசம் உள்ள எந்த சொத்தையும் (ஆலை சொத்து) தங்கள் வசம் எடுத்துக் கொள்ள முடியும்'' என்று கூறி டெக்ஸ்டூல் நிர்வாகம் கொடுப்பதை வாங்கிக் கொண்டு வெளியேறுமாறு நெற்றிக் கண்ணை திறக்கிறது. ஏ.ஐ.டி.யு.சி.யின் டெக்ஸ்டூல் சங்கத் தலைவர் பார்த்திபன், எல்லோருக்கும் முன்பாக நிர்வாகத்திடம் பணம் வாங்கிக் கொண்டு ஓடிப் போய்விட்டார். ஏ.ஐ.டி.யு.சி.யின் கோவை மாவட்ட பொறியியல் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.எம். செல்வராஜ், ஏ.ஐ.டி.யு.சி.யின் செயல்களுக்கு எல்லாம் வக்காலத்து வாங்கிக் கொண்டு பொழுதைக் கழிக் கிறார். விளக்கம் கேட்டவர்களை எல்லாம் சாபம் விட்டுக் கொண்டிருக் கிறார். ''உருப்படியாக(!) நீங்கள் ஏதாவது செய்கிறீர்களா? என் நெஞ்செல்லாம் எரிகிறது... நீங்கள் இவ்வாறு செய்து கொண்டிருந்தீர்களே யானால் நாங்களும் செய்ய வேண்டி யதை செய்வோம்'' என்று கோபத்தில் எரிந்து எரிந்து விழுகிறார்.

குதிரை கீழே தள்ளி குழியையும் பறிப்பது போல, இத்தொழிற்சங்கங் களிடம் சிக்கிய தொழிலாளர்கள் வேலையும் இழந்து உரிய நட்ட ஈடும் இன்றி நடுத்தெருவில் நிற்கிறார்கள். பல ஆயிரம் தொழிலாளர்கள், கோவை மாவட்டத்தில் இதே முறையில் தொடர்ந்து வெளியேற்றப் படுகின்றனர்.

குறிப்பாக, 60 ஆண்டுகளுக்கு மேலாக 1,500 தொழிலாளர்களையும் நூற்றுக்கும் மேற்பட்ட அலுவலக ஊழி யர்களையும் கொண்டு இயங்கி வந்தது, பி.எல்.ஆர். டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட் என்ற கோத்தாரி மில். 13.4.02-இல் மில் நிர்வாகம் சட்ட விரோதமாக கதவடைப்பு செய்தது. பிறகு, பல போராட்டங்கள். இங்கும் ''போராட்ட கூட்டுக் கமிட்டி'' என்ற பெயரில் பல துரோக, பிழைப்புவாத சங்கங்கள் ஒன்று சேர்ந்து நிர்வாகத்தின்



அடியாளாக வேலை செய்தன. மில் முகப்பில், கூட்டுக் கமிட்டி சார்பில் ''நிர்வாகத்தின் வி.ஆர்.எஸ். திட்டத்தை ஏற்றுக் கொண்டு, நிர்வாகம் மில் இயந்திரங்களை விற்க அனுமதி யுங்கள்'' என்று தொழிலாளர்களுக்கு சிவப்பு சிந்தனையை ஊட்டுகின்றனர். இதிலும் பூபதி, சுகுமாரன் என்ற இரண்டு ஏ.ஐ.டி.யு.சி. கிளை நிர்வா கிகள் கையொப்பம் இட்டுள்ளனர். ஏ.ஐ.டி.யு.சி. பஞ்சாலை சங்கச் செயலர் கே.ஜி. ஜெகநாதன், ''நான் அப்படி சொல்லவேயில்லை'' என்று இரட்டை வேடம் போட்டு தொழிலாளர்களிடம் மாட்டிக் கொண்டார். ''இயந்திரங் களை கழட்டாதே'' என்று தொழிலா ளர்கள் குடும்பமாக வந்து போராடிய போது சிங்காநல்லூர் போலீசு, ''போராட்டத் தலைவர்கள் காவல் நிலையத்திற்கு வந்து நிர்வாகம், இயந்திரங்களை கழட்டிச் செல்ல எங்க ளுக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லிவிட்டனர்'' என்று போட்டு டைத்தது.

இப்படி, கோவையில் எண்ணற்ற தொழில் நிறுவனங்கள் - பிரிக்கால், கே.எஸ்.பி. பம்ப்ஸ், வி.ஜே. என்ஜினி யரிங், ரேவதி சி.பி.லிட்., வி.எஸ். பவுண்டரி மற்றும் ரூட்ஸ் - இவற்றின் தொழிலாளர்கள் சமரச, துரோக, பிழைப்புவாத தொழிற்சங்க தலைமை யினால் மொத்தமாக வாழ்வு இழந்து நிற்கின்றனர்.

தொழிலாளர்கள் தூக்கு மேடையே றியும், துப்பாக்கிக் குண்டுகளை நெஞ்சில் தாங்கியும் போராடிப் பெற்ற உரிமைகள் அனைத்தும் துரோக தொழிற்சங்க தலைமைகளினால் ஒப்பந்தங்கள் என்ற பெயரில் சிறுகச் சிறுக சிதைக்கப்பட்டு இன்று தொழிலா ளர்கள் உரிமைகள் ஏதுமற்று, வேர றுந்த மரமாகச் சாய்கிறார்கள்.

இதனால், தொழிலாளர்கள் துரோக, சமரச தொழிற்சங்கத்தினால் விரக்தி அடைந்து, மாற்றாக பிழைப்பு வாதி புவனேஸ்வரன், குசேலர் போன்ற தலைமையிடம் அடைக்கலம் தேடுகின்றனர். இது, நாயிடம் தப்பி பேயிடம் அகப்பட்ட கதையானது.

தொழிலாளிகள், மீண்டும் வர்க்க உணர்வோடு தொழிலாளி வர்க்கமாக எழுந்து நிற்க வேண்டுமானால், தனித் தனியாக துறைசார்ந்த கோரிக்கை களையும் போராட்டங்களையும் மட்டுமே நடத்துவதால் பயனேது மில்லை. ஆலைமூடல், ஆட்குறைப்பு, உரிமைகள் பறிப்பு என்பது ஏதோ தனி ஒரு நிறுவனத்திலோ அல்லது குறிப் பிட்ட துறை சார்ந்த ஆலைகளில் மட்டுமோ நடப்பதில்லை. புதிய பொருளாதார கொள்கையின் விளை வாக, அனைத்துப்பிரிவு மக்களும் தொழிலிலிருந்து விரட்டப்படுகின் றனர். இதை உணர்ந்து பரந்துபட்ட மக்களின் கோரிக்கைகளுக்காக தொழி லாளர்கள் போராடுவதும், அவர்க ளோடு ஒன்றிணையும் போது மட்டுமே இழந்த உரிமைகளை கூட வென்றெடுக்க முடியும்.

இதற்கு சமரசமற்ற தன்னலமற்ற விரிந்த பார்வை கொண்ட போராட்டத் தலைமை தேவை. சந்தா வசூலிப் பதைத் தவிர தொழிலாளர்களை வேறு எந்த சங்க வேலைகளிலும் பயிற்றுவிக் காத பிழைப்புவாத தொழிற்சங்கங் களால் இப்பணியைச்சாதிக்க முடியாது.

**- பு.ஜ. செய்தியாளர்கள், கோவை**


படிப்பகம்

# பாமரர்களின் பக்தியே ஆர்.எஸ்.எஸ்.-இன் அடித்தளம்!

ஒரு அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக தமிழகத்தில் நிலவிய பார்ப்பன எதிர்ப்புணர்வை மங்கச் செய்வதற்கும் பகுத்தறிவு, சுயமரியாதை இயக்கம் ஏற்படுத்தியிருந்த தாக்கத்தை ஒழிப்பதற்கும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன பாசிச பயங்கரவாதிகள் என்னென்ன செய்தார்கள் என்பது நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விடயமாகும். அந்தச் சிரமத்தை நமக்கு அவர்கள் கொடுக்கவில்லை. தாமே தொகுத்துக் கொடுத்துள்ளார்கள்.

பல பத்தாண்டுகள் நீடித்திருந்த பகுத்தறிவு - சுயமரியாதை இயக்கம், பார்ப்பன சனாதன தர்மத்தையும் அது போற்றிக் காப்பாற்றிய கடவுள், மதம் பற்றிய சடங்கு சாத்திரங்கள் - மூடத்தனங்களை ஆட்டங் காணச் செய்தது உண்மையே. ஆனால், ஒரு நச்சு மரத்தின் வெவ்வேறு கிளைகள் வெட்டப்பட்ட பின்னரும் அது துளிர்க்க முடியும் என்பதைப் போல கடவுள் நம்பிக்கை, பக்தி உணர்வு ஆகியவற்றுக்கான சமூக, அரசியல், பொருளாதார அடிப்படை வேரோடு பிடுங்கி எறியப்படவில்லை. அதனால் மக்கள் மனதில் அவை நீடித்திருந்தன.

பகுத்தறிவு, சுயமரியாதை இயக்கத்தின் மூலம் - நாத்திக பிரச்சாரத்தின் மூலம் மட்டுமே மதத்தை ஒழித்து விடலாம் என்று பெரியாரும் திராவிடர் கழகத்தவரும் நம்பினார்கள். கடவுள், மதம், பக்தி எல்லாம் மக்கள் அறியாமையால் பிறக்கின்றன; பார்ப்பனர்கள் அவற்றை தமது சுய நலனுக்காக உருவாக்கி பரப்பி வருகிறார்கள்; எனவே மக்களிடையே நிலவும் அறியாமையை அகற்றினால், பகுத்துப் பார்த்து, ஆராய்ந்து, முடிவெடுக்கும் முறையை - அதாவது, பகுத்தறிவை மக்கள் பின்பற்றினால் மதத்தையும் கடவுளையும் தூக்கி எறிந்து விடுவார்கள் என்று நம்பினார்கள். ஆனால் அது அப்படி நடக்கவில்லை.

பகுத்தறிவுவாதிகளும் திராவிடர் கழகத்தினரும் பல ஆண்டுகாலம் எண்ணற்ற வடிவங்களில் பிரச்சாரம், இயக்கங்கள் நடத்திய பிறகும் பக்தியும் கடவுள் நம்பிக்கையும் மக்கள் மனத்திலிருந்து நீங்கவில்லை. கடவுள், மதம் மீதான பார்ப்பனக் கற்பிதங்கள் மட்டுமே கணிசமான மக்களிடமிருந்து அகற்றப்பட்டன. கடவுளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவில் பார்ப்பனர்களின் பூசாரித்தனம் - மோசடிகளைப் புரிந்து கொண்டார்கள்.

ஆனால், இம்மை உலகில் தாங்கள் படும் துன்ப துயரங்களுக்கான காரணம் அறியாது, ஏதோ ஒரு சக்தி அல்லது தலைவிதி தங்களை ஆட்டுவிக்கிறது என்று கருதி, அந்தச் சக்தியைக் கண்டு மக்கள் அஞ்சுவது தான் மறுமை உலகின் மீதும், மதத்தின் மீதும், இறைவன் மீதும் மக்கள் ஆழ்ந்த நம்பிக்கை கொள்வதற்கு அடிப்படையாகும். துன்பதுயரங்களும், வாழ்வில் அடுத்து என்ன நடக்குமோ என்ற நிச்சயமற்ற தன்மையும், அதனால் வரும் அச்சமும் நாளுக்குநாள் அதிகரித்து வருவதுதான் பக்தியும் கடவுள் நம்பிக்கையும் பெருகி வருவதற்கு மூல காரணமாகும். பார்ப்பனர்களின் கற்பிதங்களும், ஆதிக்கமும் மட்டும் இதற்கு மூலகாரணமில்லை. இங்குள்ள சமூக, அரசியல், பொருளாதார அமைப்பு முறைதான் மக்களின் மனங்களில் கடவுள், பக்தி, மத நம்பிக்கைகள் நீடித்திருப்பதற்குக் காரணம்.

எனவேதான் பகுத்தறிவுவாதிகளுடன் திராவிடர் கழகத்தவரும் எவ்வளவோ முயன்றும் கடவுள், மத நம்பிக்கைகளும், பக்தி உணர்வும் நீடித்திருந்தன. இதைப் பயன்படுத்திக் கொண்டுதான் தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவா சக்திகள் வேர்விட்டு வளர்ந்து நிற்கின்றன.

*''தமிழ்நாட்டின் முக்கிய அடையாளம் ஆயிரக்கணக்கான இந்துக் கோவில்கள். தமிழ்நாட்டு அரசாங்க சின்னம்கூட இந்து கோவில் கோபுரம்தான். மொத்த நாட்டிலேயே, தமிழ்நாட்டில்தான் சிறியதும் பெரியதுமாக அதிக எண்ணிக்கையிலான கோவில்கள் இருக்கின்றன. சிறீரங்கம், ராமேசுவரம், மதுரை போன்ற சில கோவில்கள் பல பத்து ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட மிகப் பெரியவை. கிட்டத்தட்ட 20 கி.மீட்டருக்கு ஒரு இடத்தில் வானத்தைத் தொடும் கோயில் கோபுரத்தை காணலாம். கோவிலுக்குப் போவதும் வழிபடுவதும் தமிழ்நாட்டு மக்களின் பிரபலமான ஒரு பாரம்பரிய நடைமுறையாக இருக்கிறது. ஒவ்வொரு கோவிலிலும், பழைய பழக்கவழக்கத்தின்படி பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்புடன் பாரம்பரிய விழாக்கள் இன்றும் நடக்கின்றன.'' ''இந்த நவீன காலத்திலும் கூட நெற்றியில் விபூதி, சந்தனம், குங்குமம், நாமம் அணிந்து துணிச்சலாகக் காட்சியளிக்கும் மனிதர்களை பொதுவில் பார்க்க முடிகிறது. யாரும் இதற்காக வெட்கப்படுவதில்லை. பெண்கள்கூடத் தமது முகம், கை, கால்களில் மஞ்சள் பூசிக் கொள்வதைப் பெருமையாகக் கருதுகின்றனர். ஆக, அடிப்படையில் தமிழ்நாடு, கோவில்களும் பழம் பாரம்பரியங்களும் நிறைந்த ஆன்மீக பூமியாகும்.''* (தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்து எழுச்சியின் கதை, ஆர்.எஸ்.எஸ். வெளியீடு, பக். 10-11)

இவ்வாறு கடவுள், ஆன்மீகம், பக்தி, கோவில்கள், மதம், வழிபாடு - இதுதான் கேந்திரமான கண்ணி. இதைப் பற்றிக் கொண்டு தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வது என்று ஆர்.எஸ்.எஸ். - இந்துத்துவா சக்திகள் முடிவு செய்தன. இந்த அடிப்படையில் ''பக்தர்''களைத் திரட்டி, அவர்களுக்கு இந்துமத முத்திரை குத்தி, அமைப்பாக்கி ஆதரவைத் திரட்டிக் கொள்வது என்கிற நயவஞ்சக வழியைத் தெரிந்தெடுத்துக் கொண்டன.

தெருமுனையில், சாலைகளின் சந்திப்பில் பிள்ளையார் அல்லது அம்மன் பொம்மையை வைத்துக் கிரமமான பூசைகள், வழிபாடுகள், விழாக்களை நடத்துகிறார்கள். பிரசாதம், அன்னதானம் போன்றவை இலவசமாக வழங்கப்படுகின்றன. யார், எதற்காக இதையெல்லாம் செய்கிறார்கள் என்கிற கேள்வியின்றி ''பக்தர்கள்'' ஈர்க்கப்படுகிறார்கள். இவ்வாறான பக்தியும் நம்பிக்கையும் வழிபாடும் எல்லாக் கிராமங்களிலும், நகரங்களிலும் ஏற்கனவே உள்ள கோவில்கள் மூலம் புதுவேகம், மோகத்தோடு

www.padippakam.com

வளர்க்கிறார்கள்.


*''இதுதான் நமது பாரம்பரியம், மரபு; இதை நாம் கைவிட்டதால், மறந்து போனதால் திராவிடக் கட்சிகள் நாத்திகர்கள், கம்யூனிஸ்டுகள், இசுலாமியர், கிறித்தவர் ஆதிக்கம் வந்துவிட்டது. ஏராளமான சொத்துக்களும் வருமானமும் கொண்டுள்ள இந்துக் கோவில்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டு விட்டது. நாத்திகர்களான திராவிடக் கட்சிக்காரர்களின் கைகளில் கோவில் நிர்வாகம் போய்விட்டது. கோவில் சொத்துக்களையும், வருவாயையும் லஞ்ச ஊழல்கள், முறைகேடுகள் செய்து அவர்கள் அபகரித்துக் கொள்கிறார்கள். அரசாங்க ஊழலும் கோவில்களுக்குள் புகுந்துவிட்டது. இதனால் ஆயிரக்கணக்கான கோவில்களில் பூசைகள் நடத்தக்கூட நிதியில்லை; அவை பராமரிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு, பாழடைந்தும் இடிந்து விழுந்தும் அழிந்து வருகின்றன''* என்கிற பிரச்சாரத்தைக் கிளப்பிவிட்டன ஆர்.எஸ்.எஸ்.-இந்துத்துவா அமைப்புகள்.

இந்தப் பிரச்சார அடிப்படையில் அரசாங்கத்திடமிருந்தும் ''நாத்திகர்''களிடமிருந்தும் கோவில்களையும், கோவில் சொத்துக்களையும் மீட்டு இந்துக்களிடம் ஒப்படைப்பது என்பதை மைய நோக்கமாக அறிவித்தனர். இதை நிறைவேற்றுவது என்கிற பெயரில் ''ஆலயப் பாதுகாப்பு கமிட்டி'' என்றொரு அமைப்பை ஆர்.எஸ்.எஸ். தொடங்கியது. சேலம் எம்.ராமசாமி என்ற தீவிர ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் அதற்குத் தலைவராக்கப்பட்டார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மூலவர்களான மராத்திய சித்பவன பார்ப்பனர்கள் பாரம்பரிய உரிமை பாராட்டும் பார்ப்பன பேஷ்வா அரசாட்சியாளர்களின் கொடியே இந்த ஆலயப் பாதுகாப்புக் கமிட்டியின் கொடியாக அறிவிக்கப்பட்டது. எப்படிப்பட்ட பிரச்சினைக்கு, எப்படிப்பட்ட அடையாளத்தையும் தலைமையையும் கொடுத்தார்கள் என்பது இதிலிருந்து புரியும்.

இந்த ஆர்.எஸ்.எஸ். ராமசாமி தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆங்காங்கே ஆலயப் பாதுகாப்புக் கமிட்டிகள் அமைத்தார். இசுலாமிய கிறித்தவ வழிபாடு இடங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை அம்மத அமைப்புகளே நிர்வகிப்பது போல அரசின் பொறுப்பிலுள்ள கோயில்களும் சொத்துக்களும் இந்துக்களிடமே ஒப்படைக்க வேண்டும்; பராமரிப்பு இல்லாமல் பாழடைந்த கோவில்களை மறுசீரமைப்பு செய்து, பூசைகளும் வழிபாடுகளும் நடத்த வேண்டும் என்று ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி இயக்கங்கள் நடத்தியது. ஏற்கனவே ''இந்துக் கோவில்''களும் சொத்துக்களும் பார்ப்பனர்களாலும், உள்ளூர் மிட்டா மிராசுகளாலும் தர்ம கர்த்தாக்கள் என்ற பெயரில் கொள்ளையடிக்கப்பட்டு வந்தன; சூத்திரர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் உரிமைகள் மறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்தனர்; இதற்குச் சட்டப்பூர்வ பாதுகாப்பும் இருந்தது. எனவேதான் கோவில்கள் அரசின் பொறுப்பில் கொண்டு வரப்பட்டு அறநிலையத் துறை உருவாக்கப்பட்டது.

இந்த உண்மையை மூடிமறைத்து மீண்டும் தர்மகர்த்தா முறையைப் புகுத்தி மேல்சாதி - மேட்டுக்குடி ஆதிக்கத்தினை நிறுவுவதற்குத்தான் இந்த ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி மூலம் ஆர்.எஸ்.எஸ். எத்தணித்தது. இப்போது ஓட்டுக் கட்சி பிரமுகர்களாகவும் உள்ள மேல்சாதி - மேட்டுக்குடி ஆதிக்க சக்திகளும், பிற சாதிகளில் உள்ள ஓட்டுக் கட்சிப் பிழைப்புவாதிகளும் ஆலயப் பாதுகாப்பு என்ற பெயரில் மேற்கொள்ளும் முயற்சிகளை வரவேற்றனர்; ஒத்துழைத்தனர். இது குறித்து, *''கோவில் இயக்கம் குறிப்பிடத்தக்க அளவு இந்து விழிப்புணர்வை ஏற்படுத்தியது. ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு, கோவில் விவகாரங்கள் குறித்துப் பேசுவதற்கு ராமசாமியை அழைப்பதும், குறைகளைக் கேட்பதும் துவங்கியது''* என்று ஆர்.எஸ்.எஸ். பெருமைப்பட்டுக் கொள்கிறது.

ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி என்கிற பெயரில் ''பக்தர்களைத் திரட்டுவதற்கு முயன்ற ஆர்.எஸ்.எஸ். - இந்துத்துவா சக்திகள், தமக்குள்ள பார்ப்பன - பனியா பின்னணியை மூடி மறைத்து, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் பாடுபடுவதாகக் காட்டும் இன்னொரு வேலையில் இறங்கியது.




படிப்பகம்

www.padippakam.com

*''பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களும் புறக்கணிக்கப்பட்டவர்களுமான கிராமக் கோவில் பூசாரிகளை அமைப்பாக்கும் ஒரு நூதனமான முயற்சியில் தமிழ்நாடு விசுவ இந்து பரிசத் ஈடுபட்டது. கோவில்களே இல்லாத கிராமங்களைத் தெரிவு செய்து நூற்றுக்கும் மேற்பட்ட புதிய கோவில்களை வி.இ.ப. கட்டியது. பூசாரிகள் தங்கள் கோவில்களில் பூசைகள் நடத்துவதற்காக வேத ஆகம பாரம்பரிய சடங்கு - சாஸ்திரங்கள் அவர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டன. அம்மாதிரியான ஒரு பயிற்சி வகுப்பிற்கு வந்து அவர்களை ஆசீர்வதித்து சான்றிதழ்களும் கொடுத்தார், காஞ்சி சங்கராச்சாரியார். நாளாக, நாளாக மேலும் மேலும் கூடுதலான பூசாரிகள் இந்த அமைப்பில் சேருகின்றனர்; மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தற்போது அது பரவி விட்டது.''* (மேற்படி நூல், பக். 27)

கிராமக் கோவில் பூசாரிகளை அமைப்பாக்கி, வேத, ஆகம சடங்கு சாத்திரங்களைப் பயிற்றுவிப்பதன் மூலம் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களின் கோவில்கள் - வழிபாட்டு முறைகளையும் பார்ப்பனமயமாக்கும் வேலையையும் சாதித்துக் கொள்கிறார்கள். அதேசமயம் பரவலான ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெறுகிறார்கள், ஆர்.எஸ்.எஸ். - இந்துத்துவாவாதிகள்.

கிராமக் கோவில் பூசாரிகள் பேரவை என்ற பெயரில் 2001 மார்ச் முதல் வாரம் நான்காவது மாநில மாநாடு நடத்தினர். அதில் 15 முதல் 20 ஆயிரம் பூசாரிகள் கலந்து கொண்டதாக கூறிக் கொள்கிறார்கள். காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திர சரசுவதியோடு பல மடாதிபதிகளும் வி.இ.ப தலைவர் அசோக் சிங்கல் உட்பட பல பிரமுகர்கள் வந்திருந்து ஆசீர்வதிக்கவும் செய்தனர்.

*''தமிழக சட்டப்பேரவைத் தலைவர், சில அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் உட்பட பல தி.மு.க. தலைவர்கள் ஆகியவர்களோடு தமிழக முதல்வரான கருணாநிதியும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டார் என்பது தனிச் சிறப்பான அம்சமாகும். முதலமைச்சர் உட்பட அவர்கள் அனைவரும் இரண்டு மணி நேரம் மாநாட்டில் இருந்தனர்; அரை மணி நேரம் பேசிய கருணாநிதி கிராமக் கோவில்களின் முக்கியத்துவம் குறித்து ஏற்றிப் போற்றினார். ஓய்வூதியம், முறையான பயிற்சி, இலவச மின்சாரம், வீடு கட்ட மனை போன்ற கோவில் பூசாரிகளுக்கான எல்லாக் கோரிக்கைகளையும் ஏற்பதாக உறுதி கூறினார். உண்மையில் இதை அமலாக்குவதற்கான ஆணைகளை மாநாடு முடிந்த மூன்றாம் நாளுக்குள் அரசாங்கம் பிறப்பித்தது.''* (மேற்படி நூல், பக். 27-28)

இந்துத்துவா சித்தாந்தத்தை நேரடியாக முன்வைத்து அமைப்பையும், இயக்கத்தையும் கட்டுவது கடும் எதிர்ப்பைக் கிளப்பும் என்பதால் நயவஞ்சகமான வழிகளைத் தெரிவு செய்து ஆர்.எஸ்.எஸ். சதிகாரர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதற்கு இந்த ஆலயப் பாதுகாப்புக் கமிட்டியும் கிராமப்பூசாரிகள் பேரவையும் இரண்டு சான்றுகளாக விளங்குகின்றன. இவற்றின் விளைவுகளைப் பின்வருமாறு அவர்களே தொகுக்கின்றனர்.

*''இந்த நிகழ்வில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், தி.க. என்றழைக்கப்படும் கடவுள் எதிர்ப்பு திராவிட இயக்கத்திலிருந்து பிறந்த ஒரு அரசியல் கட்சி தி.மு.க.; அவர்கள் தம்மையே முற்போக்கு பகுத்தறிவாளர்கள் என்று அறிவித்துக் கொள்வார்கள். தி.க. தலைவர்கள் ஒரு காலத்தில் விநாயகர் சிலை உடைப்பு இயக்கம் கூட நடத்தினார்கள். ஏராளமான கிராமக் கோவில்களில் வழிபடப்படும் பல்வேறு வடிவங்களிலான கடவுளர்களின் சிலைகளுக்கு பூசை செய்பவர்களுடன் நாத்திகர்கள் என்று சொல்லிக் கொள்ளும் இவர்கள் கூட, தற்போது இந்த மாநாட்டில் பங்கேற்கிறார்கள். முதலமைச்சரின் பங்கேற்பால் இந்த மாநாட்டுக்குச் செய்தி ஊடகங்களில் பரவலான விளம்பரம் கிடைத்தது. இது தமிழ்நாட்டில் வளர்ந்துவரும் இந்து இயக்கத்துக்கும் இந்து விழிப்புணர்வின் அதிகரித்த அரசியல் செல்வாக்குக்கும் கிடைத்த வெற்றி. இவற்றை இனிமேலும் ஒடுக்கவோ, அலட்சியப்படுத்தவோ முடியாது; மாறாக, அரசியல் சக்திகளின் இருப்பிற்கே இவற்றின் ஆதரவை நாடி வருவதாக உள்ளன.''* (மேற்படி நூல், பக். 28)




**ஆலய நிலமீட்புப் போராட்டம் நடத்தும் இந்து முன்னணி, அரசு ஊழியர்களின் பறிக்கப்பட்ட உரிமையை மீட்கும் போராட்டத்தை நடத்த முன் வருமா?**

இந்த இரு அமைப்புகளை முன்னிறுத்தி கடவுள், கோவில் வழிபாடு என்கிற பெயரில் மதவெறியைத் தூண்டுவது ஆர்.எஸ்.எஸ். - இந்துத்துவவாதிகளின் அடுத்தத் திட்டமாக அமைந்தது. ஏற்கெனவே, பார்த்ததைப் போல பாழடைந்த பழைய கோவில்களைப் புதுப்பித்தும் பல புதிய கோவில்களைக் கட்டியும், குடமுழுக்குகள், பூசைகள் நடத்தினார்கள். ஏற்கெனவே உள்ள இசுலாமிய - கிறித்தவ வழிபாட்டு இடங்கள், இந்துக்களுக்கு உரியது என்று உரிமை பாராட்டி பல இடங்களில், பிரச்சினைகளை வேண்டுமென்றே கிளப்பி, ''மத மோதல்களை'' திட்டமிட்டு உருவாக்கினார்கள்.

கிறித்தவர்களாலும், முசுலீம்களாலும் பல இந்து வழிபாட்டு இடங்கள் இடிக்கப்பட்டதாகவும் வழிபாடுகள் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும், இந்துக்களின் உரிமை பறிக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டதாகவும் இந்து எனப்படுவோரிடையே ஆத்திரமூட்டும் புதுப்புது கதைகளை அவிழ்த்து விட்டார்கள். ''விநாயகர் பால் குடிக்கிறார்'' என்ற புரளி அத்வானி வீட்டில் இருந்தே கிளப்பி விடப்பட்டு நாடு முழுவதும் பரப்பப்பட்டதைப் போன்று இந்துக் கடவுளர்களின் ''மகிமை'' என்ற கட்டுக்கதைகளைத் திட்டமிட்டு உருவாக்கி



படிப்பகம்

dippakam.com

னார்கள்!

இப்படிப்பட்ட சதிச் செயல்களுள் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது, வேலூர் ஜலகண்டேசுவரர் கோவில் விவகாரம். இது குறித்து ஆர்.எஸ்.எஸ்.காரர்களே அளித்துள்ள வாக்குமூலம் பின்வருமாறு:

*''வேலூர் நகருக்கு அருகே ஒரு சிறிய மலையும் அதன்மீது ஒரு கோட்டையும், நகரின் மையத்தில் இன்னொரு கோட்டையும் உள்ளன. சத்திரபதி சிவாஜி மகாராஜ் இந்தக் கோட்டைகளைப் பார்வையிட்டார் என்று கூறப்படுகிறது. நகரக் கோட்டையின் மதில் சுவர்களுக்கு வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டு வானத்தை நோக்கி எழும்பியுள்ள ஒரு கோவில் கோபுரத்தைக் காணலாம். இங்குதான் ஒரு காலத்தில் வழிபாடுகள் நடந்த அருள்மிகு ஜலகண்டேசுவரர் கோவில் இருந்தது. ஆனால், கோட்டைக்குள்ளும் கோவிலுக்குள்ளும் போனால், முதன்மைக் கடவுள் (மூலவர்) சிலை முசுலீம் படையெடுப்பின்போது நானூறு ஆண்டுகளுக்கு முன்பு அகற்றப்பட்டு விட்டது என்று ஒரு கல்லில் எழுதப்பட்டிருப்பதைக் காண முடியும். கோவில் வெற்றிடமாக இருந்தது; அது அகழ்வாராய்ச்சி - தொல்லியல் சின்னமாக அறிவிக்கப்பட்டிருந்தது. அழகான அந்தக் கோவில் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளுடன் கொஞ்சமும் சிதைவுறாமல் முழுமையாக இருந்தது. அது வேலூரை சுற்றிலும் உள்ள இந்துக்களுக்கு வேதனையையும் வெட்கத்தையும் அளிக்கும் விசயமாக இருந்தது; சிவலிங்கத்தைக் கோவிலில் மறுபடியும் வைக்க வேண்டும் என்று கோரி வந்தார்கள். சிவலிங்கம் அருகிலுள்ள ஒரு கிராமத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது. சிலையை மீண்டும் வைப்பதற்கு சில பக்தர்கள் மேற்கொண்ட சில முயற்சிகள் அரசாங்கத்தின் அரசியல் காரணமாக வெற்றி பெறவில்லை. ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்து முன்னணி இந்தப் பிரச்சினையைக் கையிலெடுத்தது. அருகிலுள்ள கிராமத்தில் இருந்து பிரம்மாண்டமான சிவலிங்கத்தை மீண்டும் கொண்டு வந்து (வேலூர் கோட்டைக் கோயிலில்) வைப்பதற்கு விவரமாகவும் நுட்பமாகவும் ஒரு வழி திட்டமிடப்பட்டது. ஒரு இரகசிய நடவடிக்கை மூலம் லிங்கத்தை அங்கு வைப்பது என்பதுதான் அந்தத் திட்டம்.''*

(மேற்படி நூல், பக். 22-23)

(தொடரும்)

# கும்பக்குடியில் கள்ளர் சாதிவெறி அட்டூழியம்



திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் - அண்ணாநகர் அருகிலுள்ளது கும்பக்குடி கிராமம். கடந்த ஜூன் 9-ஆம் தேதியன்று மாலை, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மாரிமுத்து என்ற இளைஞர், மிதிவண்டியில் தனது வயலுக்குச் சென்று கொண்டிருந்தார். அதே பாதையில், திருவெறும்பூர் ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் கோவிந்தராஜின் மகன் முருகானந்தம் தனது கூட்டாளியுடன் மோட்டார் சைக்கிளில் எதிரே வந்து கொண்டிருந்தான். ஒரு திருப்பத்தில் எதிர்பாராத விதமாக மிதிவண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டன. இதனால் முருகானந்தத்துக்கோ அவனது வாகனத்துக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாத போதிலும், ''பள்ளப் பயலுக்கு இவ்வளவு திமிராடா? என்று மாரிமுத்துவைத் திட்டி பளார், பளாரென்று கன்னத்தில் அறைந்தான், கள்ளர் சாதி வெறி பிடித்த முருகானந்தம். அவனும் அவனது கூட்டாளியும் கீழே கிடந்த ஒரு கட்டையை எடுத்து மாரிமுத்துவைக் காட்டுத்தனமாகத் தாக்கி விட்டு, அவர் நிலைகுலைந்து கீழே விழுந்ததும், தமது மோட்டார் சைக்கிளில் பறந்தனர்.

தட்டுத் தடுமாறி ஊருக்குள் வந்து, தனக்கு நேர்ந்த கொடுமையை விளக்கினார், மாரிமுத்து. இதைக் கண்டு குமுறிய மாணவர்களும் இளைஞர்களும் மாரிமுத்துவை மருத்துவமனையில் சேர்த்து விட்டு அண்ணாநகர் போலீசு நிலையத்தில் புகார் கொடுத்தனர்.

புற்றுநோய் தாக்கி படுத்த படுக்கையாய் இருந்த மாரிமுத்துவின் தாயார், இத்தாக்குதலை அறிந்து, ''எங்கே என் மகன்'' என்று புலம்பிய படியே, துயரமும், அதிர்ச்சியும் தாளாமல் அடுத்த நாளில் இறந்து விட்டார். இது, இப்பகுதி இளைஞர்களை மேலும் குமுறச் செய்தது. போலீசாரிடம் புகார் கொடுத்து இருநாட்களாகியும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் இப்பகுதி இளைஞர்கள் அது பற்றி விசாரிக்க மீண்டும் போலீசு நிலையம் சென்றனர். ஆய்வாளரோ, விரைவில் நடவடிக்கை எடுப்பதாக நாடகமாடினார். தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மீண்டும் போலீசு நிலையத்தில் முறையிடச் சென்றதைக் கண்டு ஆத்திரமடைந்த கள்ளர் சாதி வெறியர்கள், இவ்விளைஞர்களை வழிமறித்துத் தாக்கினர்.

அடுத்தடுத்து கள்ளர் சாதிவெறியர்கள் தாக்குவதைக் கண்டு வெகுண்டெழுந்த இளைஞர்கள், ஜான் பாண்டியனின் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தினருடன் இணைந்து மாவட்ட போலீசு கண்காணிப்பாளரிடம் முறையிட்டனர். மக்களின் நிர்பந்தம் காரணமாக, முதன்மைக் குற்றவாளி முருகானந்தத்தை விட்டுவிட்டு மற்ற எட்டு பேரை போலீசார் கைது செய்தனர். முருகானந்தமோ ஒருவாரம் கழித்து உயர்நீதிமன்றத்தில் சரணடைந்தான். கடைசி குற்றவாளியாகவே இவனை, முதல் தகவல் அறிக்கையில் போலீசார் சேர்த்துள்ளனர். மேலும், தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமைத் தடைச் சட்டத்தின் கீழ் அல்லாமல், சாதாரண குற்றவியல் சட்டத்தின்கீழ் (பிரிவு 268) வழக்குப் பதிவு செய்து சாதிவெறியர்களுக்கு விசுவாசமாக போலீசார் வாலாட்டுகின்றனர்.

மறுபுறம், அ.தி.மு.க. செயலாளரான கோவிந்தராசுவின் சாதிவெறி பிடித்த உறவினர்கள் கையில் வீச்சரிவாளுடன் தாழ்த்தப்பட்டோர் பகுதிக்கு வந்து அச்சுறுத்துகின்றனர்.

ஆளுங்கட்சிக்காரன் என்ற அதிகாரத் திமிரும் இரத்தத்தில் ஊறிப் போன சாதியத் திமிரும் சேர்ந்து கொள்ள இக்கும்பல், தாழ்த்தப்பட்டோரை இழிவுபடுத்தி கேவலமாகப் பேசுவதும், வம்பிழுப்பதும், பஞ்சாயத்து தொலைக்காட்சியில் படம் பார்க்க வரும் தாழ்த்தப்பட்ட பெண்கள் மீது கல்லெறிந்து கிண்டல் செய்வதுமாக தினவெடுத்துத் திரிகிறது. அதன் கொட்டத்தைச் சட்டபூர்வ வழிகளால் அடக்கிவிட முடியாது. இச்சாதிவெறி கும்பலை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தித் தண்டிக்க தாழ்த்தப்பட்டோரும் கள்ளர் சாதி உழைக்கும் மக்களும் ஒன்றிணைந்து போராடுவது முதன்மையான தேவையாகும். இல்லையேல் சாதி வெறியாட்ட அட்டூழியங்களிலிருந்து கும்பக்குடி தப்ப முடியாது.

– பு.ஜ. செய்தியாளர்கள், திருச்சி.



படிப்பகம்

www.padippakam.com

7-ஆம் பக்கத் தொடர்ச்சி

நோக்கில் இருந்து நீதிமன்றம் இப்படிச் செய்வதில்லை: கடந்த சில ஆண்டுக ளாகவே தனியார்துறை, அரசுத்துறைத் தொழிலாளர்கள் தொழிற்சங்க ரீதியா கவும் சரி; பழிவாங்குதல் - பாதிப்புக ளுக்காக தனிநபர்களாகவும் சரி, நீதி மன்றத்தை அணுகினால் இப்படித்தான் தீர்ப்புகள் வருகின்றன.

நிர்வாகம் விரும்பினால் காரணம் எதுவும் கூறாமலேயே வேலை நீக்கம் செய்யவும், கதவடைப்புச் செய்யவும், ஆட்குறைப்புச் செய்யவும், வேலைப் பளுவைக் கூட்டவும் முழுவதும் ஒப்பந்தத் தொழிலாளர்களையும் தினக் கூலிகளை வைத்துக் கொள்ளவும் உரிமை உண்டு என்றுதான் தீர்ப்புகள் வருகின்றன. இதே அடிப்படையில் புதிய தொழிலுறவுக் கொள்கை வகுத்துச் சட்டமாக்கும் வேலையை மத்திய - மாநில அரசுகள் மேற்கொண் டுள்ளன. அப்படி ஒரு சட்டம் வருவ தற்கு முன்னோடியாக நீதிமன்றங்கள் விளங்குகின்றன. ஏற்கெனவே இவை அமல்படுத்தப்பட்டும் வருகின்றன. அதாவது இனி, ''தொழிலாளிக்குப் பணிப் பாதுகாப்பு இருக்கக் கூடாது, குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் கிடை யாது. ஓய்வூதியம் - பணிக்கொடை கூடாது. வேலைநிறுத்தம் மற்றும் தொழிற்சங்க உரிமைகள் கூடாது. தொழிற்தகராறுகளோ அவற்றை விசா ரிக்கும் அமைப்புகளோ கூடாது. எல்லோரும் ஒப்பந்தக் கூலிகள் - தினக் கூலிகள்தாம்.'' - இவைதாம் புதிய தொழிலுறவுக் கொள்கையின் சாரம். இதைச் சட்டமாக்கி நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும்; இத்தகைய சூழல்தான் புதிய முதலீடுகள் - வர்த்தக உறவுகளை ஏற்படுத்திக் கொடுப்பதற் கான உத்திரவாதம் என்று உலகவங்கி, சர்வதேச நிதிநிறுவனம், உலக வர்த்தகக் கழகம் ஆகிய ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளின் நிறுவ னங்கள் உத்திரவு போட்டுள்ளன.

சமீப ஆண்டுகளில் நமது நாட்டிற்குள் படையெடுத்து வந்துள்ள அந்நிய, பன்னாட்டுத் தொழில் கழகங் களின் நிறுவனங்கள் ஏற்கனவே இங்குள்ள தொழிலுறவுச் சட்டங்கள் - அமைப்புகளையோ, தொழிற்சங்கங்க ளையோ மதிப்பதில்லை. அவை தம்மைக் கட்டுப்படுத்தாதென்று திமி ரோடு நடந்து கொள்கின்றன.

### உலகவங்கி உத்தரவுப்படி புதிய தொழிலுறவுக் கொள்கை

உலகவங்கி முதலிய ஏகாதிபத்திய நிறுவனங்களால் இங்கே திணிக்கப் பட்ட தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் ஆகிய புதிய பொருளா தாரக் கொள்கையை அமலாக்குவதற் கான கட்டுமான மறுசீரமைப்பின் ஒரு அங்கம்தான் இந்தப் புதிய தொழிலு றவுக் கொள்கை. தமது இயல்பிலேயே மக்கள் விரோத, ஜனநாயக விரோத பார்ப்பன - பாசிச பயங்கரவாதிகளான ஜெயலலிதா, அத்வானி வகைய றாக்கள், உலகவங்கி முதலிய ஏகாதி பத்திய நிறுவனங்களின் உத்தரவுகளை அமலாக்குவதில் கள்ளும் சாராயமும் கலந்து குடித்த குரங்கைப் போல வெறி யாட்டம் போடுவதில் வியப்பில்லை.

ஆனால் மத்திய - மாநில அரசு களின் மக்கள் விரோத - ஜனநாயக விரோத நடவடிக்கைகளை எதிர்ப்ப தாகக் கூறும் எதிர்க்கட்சிகளில் காங்கி ரசு, தெலுங்கு தேசம் போன்றவை நேர டியாகவும் தி.மு.க., சமதா, ஜனதா போன்றவை மறைமுகமாகவும் புதிய பொருளாதாரக் கொள்கையை ஆதரிக் கின்றன. போலி கம்யூனிஸ்டுகளோ, மக்களையும் நாட்டையும் பாதிக்காத வகையில் அமலாக்க வேண்டும் என்கி றார்கள்.

இவ்வாறு அனைத்துக் கட்சிகள் ஆதரவோடு நாட்டின் சட்டங்களும் அமைப்புகளும் மக்கள் விரோதமா கவும் ஜனநாயக விரோதமாகவும் மாறி வரும் வேளையில், நீதிமன்றங்கள் மட்டும் விதிவிலக்காக இருக்க முடி யாது.

நாட்டின் அரசியல் - நிர்வாக அமைப்புகள் அனைத்தும் சீரழிந்து, கேடுகெட்டுப் போய்விட்ட நிலையில் நீதிமன்றம்தான் கடைசிப் புகலிடம்; அதையாவது நம்புங்கள் என்று போதிக்கப்படுகிறது. ''கொடுமை கொடுமை என்று குளத்தங்கரைக்குப் போனால் அங்கே இரண்டு கொடுமை குத்தவைத்து உட்கார்ந்திருந்ததாம்'' என்பார்கள். அதைப்போல நீதிமன் றமும் மக்கள் விரோத, ஜனநாயக விரோதத் தீர்ப்புகளை அள்ளி வீசுகின் றன. ஏற்கெனவே பல தனியார்மய - தாராளமய ஆதரவுத் தீர்ப்புகள் வழங் கியுள்ளன. அவற்றோடு பொது இடங் களில் ஊர்வலங்கள், பொதுக்கூட் டங்கள் நடத்தக் கூடாது, பொது வேலைநிறுத்தம், கடையடைப்பு - பந்த் போன்றவை கூடாது என்பதிலிருந்து காவிமயக் கல்வி, ராமன் தேசிய நாயகன், பொதுச்சிவில் சட்டம் தேவை என்பது போன்ற பல பாசிச, இந்துத்துவா ஆதரவுத் தீர்ப்புகள் வந்துள்ளன. இப்போது அது போலவே பல அரசியல் - தொழி லாளர் உரிமைப் பறிப்புத் தீர்ப்புகளும் வருகின்றன.

இனி தொழிற்சங்கங்கள் வைப்பதும், தொழிலாளர்கள் போராடு வதும் குற்றமாகக் கருதப்படும் என்று அறிவிக்காதது மட்டும்தான் குறை! இந்த நிலையில், தொழிற்சங்கங்கள் வைத்து நடத்தும் போலி கம்யூனிஸ் டுகள், போலி முற்போக்குகள் மற்றும் பல தொண்டு நிறுவனங்கள் இனி என்ன செய்யப்போகின்றன?

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் போராட்டத்தை ஜெயல லிதா அரசு ஒடுக்கும் போது, ''குட்டக் குட்டக் குனிவது, குனியக் குனியக் குட்டுவது'' என்று அந்த நிலையைக் குறித்து கருணாநிதி சித்தரித்தார். இது மேற்படித் தொழிற்சங்கங்களுக்கும் பொருந்தும்.

சமீப ஆண்டுகளில் அரசும் தனி யார்துறையும் மேற்கொண்ட உரிமை பறிப்பு, ஆட்குறைப்பு, ஆலை மூடல், விருப்ப மற்றும் கட்டாய ஓய்வு, பொதுத்துறை நிறுவனங்களைத் தனி யாருக்குத் தாரை வார்ப்பது, கணினி மயமாக்குவது என்று தொழிலாளர் விரோத நடவடிக்கைகள் அனைத் தையும் எதிர்க்கத் திராணியின்றி தொழிற்சங்கங்கள் சரணடைந்தன. புதுப்புது சட்டங்கள், நடவடிக்கைக ளுக்கு வியாக்கியானங்கள் செய்வதும், வரம்புகளைச் சுட்டிக் காட்டித் தொழிலாளர்களையே மிரட்டு வதும் எதிர்க்கும் சக்தி இல்லை எனக் கூறிப் பின்வாங்குவதும், ''கௌரவ மான'' ஒப்பந்தங்களுக்கு முயற்சிப் பதும், இறுதியில் செயலிழந்து நிற்பதும், மேற்படி தொழிற்சங் கங்களின் அணுகுமுறையாக இருக்கி றது.

இனி, தொழிற்சங்கங்களே கூடாது; இனிமேல் அனைவரும் தினக் கூலிகள், ஒப்பந்தக் கூலிகள்தாம் என்பது சட்டபூர்வமாக்கப்படுகிறது. இந்த நிலைக்கு அரசு ஊழியர்களையும் - ஆசிரியர்களையும் தள்ளுவது என்பதில் நாட்டிற்கே முன்னோடியாக ஜெயலலிதா விளங்குகிறார். ''பயன்படுத்தி விட்டுத் தூக்கியெறியும்'' பொருட்களைப் போல தொழிலாளர்கள் மாற்றப்படுகி றார்கள். இப்போதுள்ள தொழிற்சங்க அமைப்புகளும் போராட்டங்களும் இந்தச் சவாலை இனிமேலும் எதிர் கொள்ள முடியாது. புதிய அமைப்பு களும் போராட்ட முறைகளும் வந்தாக வேண்டும்.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com



***கல்வி, குடிநீர், மின்சாரம்***
***தனியார்மயமாவதைக் கண்டித்து***

# புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டங்கள்

கல்விக்கான கட்டண உயர்வு, பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகை மற்றும் கல்விக் கடன் நிறுத்தம், அரசு பராமரித்து வந்த விடுதிகளைத் தனியாரிடம் ஒப்படைப்பது, இலவச 'பஸ் பாஸ்' ரத்து - மொத்தத்தில் காசில்லாதவனுக்குக் கல்வியில்லை என்னும் புதிய மனுதர்மம் - இதுதான் உலக வங்கி கைக்கூலி பாசிச ஜெயா அரசின் கல்விக் 'கொள்கை'.

உழைக்கும் மக்களை மட்டுமல்ல, நடுத்தர வர்க்கப் பிள்ளைகளுக்கே கல்வி எட்டாக் கனியாக மாறியுள்ள சூழலை எதிர்த்துப் போராடாமல் ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் மௌனம் சாதிக்கின்றன. இந்நிலையில், மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் கடந்த இரண்டு மாதங்களாக தொடர் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு மக்களை அரசியல் போராட்டத்துக்கு அணி திரட்டி வருகின்றன.

திருச்சியில் ஜூலை 15 மாலை 4 மணிக்கு 'பொது குடிநீர் குழாய்களைத் துண்டிக்காதே! கல்வி, மின் கட்டணங்களை உயர்த்தாதே!' என்ற தலைப்பில் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். தோழர் மதன் தலைமையேற்க, தோழர்கள் இராமதாசு, சிவா, ராஜா, சேகர் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினர். குடிநீர் குழாய்களைத் துண்டிப்பதும், மின், கல்விக் கட்டண உயர்வும் தனியார்மயம், தாராளமயம், உலகமயத்தின் அடிப்படையில் திட்டமிட்டே செய்யப்படுகின்றன என்பதை ஒருங்கிணைந்த முறையில் புரிந்து கொண்டு போராட வேண்டுமென்பதை புரிய வைப்பதாக தோழர்களின் உரை அமைந்தது.

தஞ்சையில் ஜூன் 25-ஆம் தேதி இரயிலடியில் தோழர் துரை.பெரியசாமி தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தோழர் வீர.செந்தில் கண்டன உரையாற்றினார்.

கண்டன உரையில் ஜெயாவின் பார்ப்பன வெறி, பாசிசத் திமிரையும், உலக வங்கி கைக்கூலித்தனத்தையும் அம்பலப்படுத்தி பேசியது அனைவரையும் கவர்ந்தது. திரளான மக்கள் கூடிநின்று ஆதரவளித்தனர்.

திருவையாறு வட்டம், பூதலூர் ஒன்றியத்தில் ஜூலை 13-ஆம் தேதி காலையிலும், அதே ஒன்றியத்திலுள்ள செங்கிப்பட்டியில் மாலையிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. தோழர் துரை.பெரியசாமி மற்றும் தோழர் பாபு ஆகியோர் முறையே தலைமையேற்க தோழர் இராஜா கண்டன உரையாற்றினர். மழையையும் பொருட்படுத்தாமல் உழைக்கும் மக்கள் கடைசிவரை கேட்டு தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். ●

# இன்றைய தோல்வியாளர்களே... நாளைய வெற்றியாளர்கள்!

இந்திய வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவுக்கு ஒரு மாநிலத்தின் ஒட்டு மொத்த அரசு ஊழியர்களும் ஒரு சேர போராட்டத்தில் குதித்து, அரசு இயந்திரத்தையே செயலிழக்க வைத்துள்ளனர். அதேபோல் இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களை ஒரே நேரத்தில் டிஸ்மிஸ் செய்ததும் இந்திய வரலாற்றில் இதுவே முதல்முறை.

இப்படி, வரலாற்று முக்கியத்துவம் கொண்ட இந்தப் போராட்டம் தோல்வி அடைந்தது ஏன்? அரசு ஊழியர்களின் போராட்டத்தைக் கண்டு கொள்ளாமல் பிற உழைக்கும் மக்கள் ஒதுங்கி நிற்க முடியுமா? அரசு ஊழியர்களின் போராட்டம் வெறும் சம்பள உயர்வுக்காகவா? ஜெயாவின் டிஸ்மிஸ் நடவடிக்கை, லஞ்சத்தை ஒழித்து மக்களுக்குச் சேவை செய்யவா?

மேற்கண்ட பல்வேறு கேள்விகளுக்கும் விடைகூறும் விதமாக அமைந்திருந்தது திருச்சி உறையூர் கடைவீதியில் ஜூலை 18-ஆம் தேதி நடைபெற்ற விளக்கப் பொதுக் கூட்டம். மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, ஆட்டோ ஓட்டுனர் பாதுகாப்பு சங்கம், அனைத்துத் தரைக் கடை வியாபாரிகள் பாதுகாப்பு சங்கம் ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து நடத்திய இப்பொதுக் கூட்டத்திற்கு ம.க.இ.க. மாவட்ட செயலர் இராமதாஸ் தலைமையேற்க, உசிலை வட்ட வி.வி.மு. தோழர் சிவகாமு சிறப்புரை ஆற்றினார்.

இறுதியாக. ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி எழுச்சியூட்டும்படி அமைந்தது. அரசு ஊழியர்கள், நெசவாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் உள்பட திரளான கூட்டத்தினர் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

சென்னை - சேத்துப்பட்டில் ஜூலை 26-ஆம் தேதியன்று மாலை ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன் சிறப்புரையாற்றிய தெருமுனைக் கூட்டம் பகுதிவாழ் மக்களிடத்தும் அரசு ஊழியர்களிடத்தும் பெருத்த வரவேற்பைப் பெற்றது. அதைத் தொடர்ந்து ஜூலை 28 அன்று கொரட்டூரிலும், 31-ந் தேதியன்று அம்பத்தூர் தொழிற்பேட்டையிலும் நடந்த தெருமுனைக் கூட்டங்களில் பு.ஜ.தொ.மு. தோழர் லோகநாதன் சிறப்புரையாற்றினார். உலகவங்கி கைக்கூலி அரசுக்கு எதிராக அனைத்து பிரிவு உழைக்கும் மக்களும் ஒன்றிணைந்து போராட வேண்டிய அவசியத்தை இக்கூட்டங்கள் உணர்த்துவதாக அமைந்தன. ●


படிப்பகம்

www.padippakam.com

# மாமூல் கொடுக்க மறுத்த சாராய வியாபாரி கொலை! கலால் பிரிவு போலீசாரின் பயங்கரவாதம்!

விழுப்புரம் மாவட்டம் - திருவெண்ணெய் நல்லூர் போலீசு எல்லைக்குட்பட்ட பல ஊர்களில், போலீசார் மாமூல் பெற்றுக் கொண்டு கள்ளச் சாராயம் விற்க அனுமதித்து வருகின்றனர். திருமுண்டீஸ்வரர் கிராமம் என்ற ஊரில் போட்டி அதிகமாக இருந்ததால், சிவானந்தம் என்ற சாராய வியாபாரி ஊரின் எல்லைப் பகுதியில் (கிரீமேடு - தடுத்தாட்கொண்ட ஊர் ஆகிய கிராமங்களுக்கு அருகில்) போலீசு ஆதரவோடு சாராயம் விற்று வந்தான். உள்ளூர் போலீசு மாமூல் வாங்கும்போது, கலால் பிரிவு போலீசு விரலை வாயில் வைத்துக் கொண்டா இருக்கும்?

திருக்கோவிலூர் சரக கலால் பிரிவு போலீசார் நாலுபேர், சிவானந்தம் சாராயம் விற்கும் இடத்திற்கு வந்து மாமூல் கேட்டு மிரட்டியுள்ளனர். ''நான் திருவெண்ணெய் நல்லூர் லோக்கல் போலீசுக்கு கொடுத்து வருகிறேன்; அதனால் உங்களுக்கு வேறு தனியாகத் தரமுடியாது; கிராமத்தில் சாராயம் விற்கும் மற்றவர்களையும் பிடித்து வந்தால் நானும் உங்களுடன் கேஸ் கொடுக்க வருகிறேன்'' என்று சிவானந்தம் மறுத்துள்ளான். இதனால் ஏமாற்றமும் கோபமும் அடைந்த கலால் பிரிவு போலீசார், சிவானந்தத்தைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியதோடு ஓட முடியாதபடி அவனது காலையும் உடைத்தனர். இக்கொலைவெறி தாக்குதலில் மயங்கி விழுந்த சிவானந்தம், அடுத்த சில நிமிடங்களில் காதுகளிலிருந்து இரத்தம் வழிய இறந்து விட்டான். இக்கொலை ஜூன் 12-ஆம் தேதியன்று நடந்தது.

பீதியடைந்த கலால் பிரிவு போலீசார், திருவெண்ணெய் நல்லூர் போலீசு நிலையம் சென்று தகவல் தெரிவித்து விட்டுப் பறந்தனர். கலால் போலீசார் நடத்திய இக்கொலையை நேரில் பார்த்த சிலர், திருவெண்ணெய் நல்லூர் போலீசாரிடம் முறையிட்டபோதிலும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர் மாவட்ட ஆட்சியர், போலீசு கண்காணிப்பாளர் ஆகியோருக்குத் தகவல் தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து, இதுபற்றி விசாரிக்க திருக்கோவிலூர் உதவி கலெக்டர் மறுநாள் வருவார் என்று அறிவிக்கப்பட்டது.

விசாரணையில் உண்மை வெளியாகி விடுமோ என்று பீதியடைந்த திருவெண்ணெய் நல்லூர் போலீசார், சிவானந்தத்தின் மனைவி பச்சையம்மாளிடம் ''போலீசை எதிர்த்து நீ வாழ முடியாது'' என்று மிரட்டிவிட்டு, ''வருங்காலத்தில் உன் குடும்பத்தினர் சாராயம் விற்க எந்த இடையூறும் செய்ய மாட்டோம்; பிரேதப் பரிசோதனை - ஈமச் செலவுகளுக்குப் பணம் தருகிறோம்'' என்று உறுதியளித்துள்ளனர். பின்னர், ஓடும்போது தவறி விழுந்து சிவானந்தம் இறந்துவிட்டதாக பச்சையம்மாளிடம் எழுதி வாங்கிக் கொண்டு, அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தனர். உதவி கலெக்டர் விசாரணை செய்ய வந்தபோது, இக்கொலையை நேரில் பார்த்தவர்களை சாட்சியம் சொல்லவிடாமல் சீருடை அணியாத போலீசார் தடுத்து மிரட்டியுள்ளனர்.

உதவி கலெக்டர் சென்ற பின்னர், உள்ளூரைச் சேர்ந்த போலீசுத் தரகன் பாண்டியன் மற்றும் சிலரைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு லட்சரூபாய் பணமும், மாமூல் இல்லாமல் சாராயம் விற்க அனுமதியும் தருவதாகக் கூறிய போலீசார், உடனிருந்து பிணத்தை எரித்து விட்டுச் சென்றனர். போலீசார் கொடுத்த தொகையில் ரூ. 25,000 மட்டுமே பச்சையம்மாளுக்குத் தரப்பட்டுள்ளது. மிகுதியை போலீசுத் தரகன் பாண்டியனும் மற்றவர்களும் ஏப்பம் விட்டுவிட்டனர்.




இந்நிலையில், இந்தக் கொலை பற்றி பாரபட்சமின்றி விசாரணை நடத்தி போலீசார் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும், சிவானந்தத்தின் குடும்பத்துக்கு உரிய நட்டஈடு கோரியும் இதே கிராமத்தைச் சேர்ந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் துரைக்கண்ணு மேற்கொண்ட தொடர் முயற்சியால், மாவட்ட ஆட்சியாளர், வருவாய்துறை அதிகாரியின் விசாரணைக்கு உத்தரவிட்டார். இதனடிப்படையில் ஜூலை 10, 17 ஆகிய தேதிகளில் விசாரணை நடந்துள்ளது. விசாரணையில் உண்மைகள் வெளிவராமல் தடுக்க கலால் பிரிவு போலீசாரும் தரகன் பாண்டியனும் பச்சையம்மாள் உள்ளிட்ட அனைவரையும் அச்சுறுத்தியதோடு, நைச்சியமாக பண ஆசை காட்டவும் செய்தனர்.

''அடக்குமுறை அரசு இயந்திரம் தனது உறுப்பாகிய போலீசுத் துறையின் மீது பாரபட்சமின்றி விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கும் என்று எனக்கு நம்பிக்கை இல்லை. இருப்பினும் போலீசு - சாராய வியாபாரி கூட்டணிக்குள் நடக்கும் மோதலையும், அதில் சாராய வியாபாரிக்கு மட்டுமே ஒருதலைப்பட்சமாக கொடுக்கப்படும் தண்டனையை அம்பலப்படுத்துவதும், போலீசு மீது மக்களுக்கு இருக்கும் அச்சத்தைப் போக்குவதும்தான் என் குறிக்கோள். நீதிக்காக மக்களைத் திரட்டி தொடர்ந்து போராடுவேன்'' என்று உறுதியுடன் கூறுகிறார் தோழர் துரைக்கண்ணு.

அவரது போராட்டத்துக்கு உறுதுணையாக நிற்கும் விவசாயிகள் விடுதலை முன்னணி, போலீசு - சாராய - கிரிமினல் கூட்டணியை அம்பலப்படுத்தி முறியடிக்க மக்களிடம் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறது.

**- விவசாயிகள் விடுதலை முன்னணி, திருவெண்ணெய் நல்லூர் ஒன்றியம்.**


படிப்பகம்

www.padippakam.com

இந்தப் படத்தில் இந்திய இராணுவச் சிப்பாயைப் பார்த்துச் சிரிப்பும் கும்மாளமுமாகக் கையசைக்கும் இவர்கள், காசுமீர் மாநிலத்தில் உள்ள அமர்நாத் குகைக்கு, ''பனி லிங்கத்தை''த் தரிசிக்கச் செல்லும் 'பக்தர்கள்'. இந்த அமர்நாத் உல்லாசப் பயணத்தை, புனித ஆன்மீக யாத்திரையாக இந்திய அரசும், பத்திரிகைகளும் சித்தரிக்கின்றன. இந்து மதவெறியர்களால் நடத்தப்படும் பிள்ளையார் ஊர்வலத்தில் ஆன்மீகம் உள்ளதென்றால், எந்த முட்டாளாவது நம்புவானா? அது போன்றதுதான் அமர்நாத் யாத்திரையும். அமர்நாத் குகையில் உருவாகும் பனிக் குன்றை, சுயம்புவாகத் தோன்றும் பனி லிங்கம் என இந்து மதவெறிக் கும்பல் மோசடிப் பிரச்சாரம் நடத்தி வருகிறது.




காசுமீர் நிலைமை இந்திய அரசின் கட்டுக்குள் இருப்பதைக் காட்டவும், இந்து மதவெறியைத் தூண்டவும்தான் அமர்நாத் யாத்திரை வருடாவருடம் இந்திய அரசின் துணையோடும், இந்து மத வெறி அமைப்புகளின் ஆதரவோடும் நடத்தப்படுகிறது. முசுலீம் தீவிரவாதிகள் இடையில் புகுந்து தடுத்தால், அவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு, யாத்திரையை நடத்தி முடிப்பதற்காகவே, சிறீநகரில் இருந்தும், ஜம்முவில் இருந்தும் அமர்நாத் செல்லும் 100 கி.மீ. வழித்தடம் நெடுகிலும், இராணுவமும், துணை இராணுவமும் குவிக்கப்படுகின்றன.

# இதுதான் இன்றைய இந்தியா

பிள்ளையார் ஊர்வலத்திற்கு எதிராக முணுமுணுக்கும் 'மதச் சார்பற்ற' ஓட்டுக் கட்சிகள் கூட, அமர்நாத் யாத்திரையின் பின்னே உள்ள இந்து மத வெறி அரசியலை அம்பலப்படுத்துவதில்லை. மாறாக, அக்கட்சிகள் இந்த ஆன்மீக அண்டப் புளுகிற்கு ஜால்ரா தட்டி வருகின்றன.

***



இந்தப் படத்தில் நாம் பார்ப்பது கண்டதேவி கோயில் தேர். இந்த ஆண்டாவது தேரை வடம் பிடித்து நாமும் இழுக்கலாம்; அரசு நம்மைக் கைவிட்டு விடாது என ஆவலோடு இருந்த தாழ்த்தப்பட்டவர்களின் ஆசை, நிராசையாகிவிட்டது.

தேரோட்டமே நின்றாலும் பரவாயில்லை; தேர் வடத்தின் மீது தாழ்த்தப்பட்டவன் கைவைக்க அனுமதிக்கக் கூடாது என்பதுதான் முக்குலத்தோர் சாதி வெறியர்களின் திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற, தேருக்கு அடைப்புக் கட்டை போடும் ஆட்களைக் கடத்தி வைத்துக் கொண்டார்கள். எங்களை மீறி தேரை இழுத்தால் தேர்க்காலில் விழுந்து தற்கொலை செய்து கொள்வோம் என மிரட்டினார்கள்.

அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்த பொழுது, ''வேலை நிறுத்தத்தின் மூலம் அரசை மிரட்டுகிறார்கள்'' எனக் கூறி அவர்களைக் கைது செய்து உள்ளே தள்ளிய ஜெயா அரசு, கண்டதேவியில், அரசை மிரட்டிய முக்குலத்தோர் சாதிவெறியர்களுடன் பணிவோடு சமரசம் பேசியது; லத்தியையும், துப்பாக்கியையும் வைத்திருந்த போலீசு பட்டாளமோ, சோளக் கொல்லை பொம்மையைப் போல நின்று கொண்டிருந்தது. இறுதியாக, சட்டம் - ஒழுங்கு என்ற வழக்கமான பல்லவியைப் பாடி, தேரோட்டத்தை நிறுத்துவதாக அரசே அறிவித்தது.

அரசு மட்டுமல்ல, இந்து, இந்து எனக் கூப்பாடு போடும் காஞ்சி சங்கராச்சாரி, இராம. கோபாலன் தொடங்கி எந்தவொரு இந்து மதவெறியனும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆதரவாக வரவில்லை. சனாதன - பார்ப்பன மதம் தான், நாகரீகமான பெயரில் இந்துமதம் என அழைக்கப்படுகிறது என்பது கண்டதேவியில் மீண்டும் நிரூபணமானது.

அமர்நாத் யாத்திரையில் முசுலீம்களுக்கு எதிராகப் பொங்கி வழியும் இந்து மத உணர்வு, கண்டதேவி தேரோட்டத்தில், தனது முகமூடியைக் கழட்டி வைத்துவிடுகிறது. அமர்நாத் யாத்திரையில் இந்து மத வெறிக்குப் பக்க பலமாக நிற்கும் அரசு, கண்டதேவியில் மேல் சாதி வெறியர்களுக்குச் சாதகமாக நடந்து கொள்கிறது. இந்தப் போலி மதச் சார்பின்மையையும், இந்த மோசடி இந்து மதத்தையும் இன்னும் நாம் ஏன் சகித்துக் கொள்ள வேண்டும்! ❑

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
PUTHIYA JANANAYAGAM FOR INDIA UNDER RNI/37946/83 Regn.No.TN/PMG(CCR)/621/03-05

www.padippakam.com

நாளை மறுநாள் குரு பெயர்ச்சி:

# அரசு ஊழியர்களுக்கு என்ன சொல்கிறது குரு பெயர்ச்சி




அரசு ஊழியர் போராட்டத்தைக் கேலி செய்து 21-07-2003 அன்று தினமலரில் வெளியான வக்கிர "குரு பெயர்ச்சி பலன்".